Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 09 சனிக்கிழமை (23-06-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:209

### ஊர்காவலர் இருவர் பலி !

கொழும்பு,ஜூன்23

அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இரு வேறு தாக்குதல் சம்பவங்களில் இரு ஊர் காவலர்கள் உயிரிழந்தனர் என விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

பக்கியெல்ல பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு ஊர்காவலர்கள் தமது மாடுகளை மேயவிட்டுக் கொண்டிருந்த வேளை, விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார்; மற்றவர் காயமடைந்தார். வெலிகந்தவில் அன்று மாலை 5 மணியளவில் வயலில் வேலை செய்துகொண்டிருந்த ஊர்காவலர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு ஊர்காவலர் உயிரிழந்தார். (க-3)

### ஐ.தே.கவின் அரசுக்கு எதிரான

## நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்று நாடாளுமன்றச் செயலாளரிடம் கையளிப்பு

### கூட்டணி, ரெலோ, காங்கிரஸ் எம்.பிக்களும் கைச்சாத்து

கொழும்பு,ஜூன்23

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்றுக்காலை 9.45 மணிக்கு நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் கையளிக்கப் பட்டது.

ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கரு ஜயசூரிய, காமினி அத்துக்கோறளை, கருணா சேன கொடித்துவக்கு, வி.ஜே.எம். லொக்குபண்டார, டிரோன் பெர்னாண்டோ ஆகியோரும் -

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் வீ.ஆனந்த சங்கரியும் -

ரெலோ எம்.பி. செல்வம் அடைக்கலநாதனும் -

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் எம்.பி. அ.விநாயகமூர்த்தியும் - பிரேரணை கையளிக்கப்பட்டபோது கூட இருந்தனர்.

நான்கு கட்சிகளையும் சேர்ந்த 97 நாடாளுமன்ற உறுப்பினர்கள்

(14ஆம் பக்கம் பார்க்க)

### சிஹல உறுமயவின் நிலைப்பாடு இதுதான்!

கொழும்பு,ஜூன்23

அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் சிறுபான்மைக் கட்சிகள் கையொப்பம் வைத்ததால்தான் சிஹல உறுமய கையொப்பம் இடவில்லை என்று அக்கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

### சிப்பாய்கள் மூவர் காயம்

கொழும்பு,ஜூன்23

வெலிஓயாவில் ஜானகபுரவுக்கு மேற்கே 'யுனிக்கோன்' வாகனத்தில் சென்ற படையினர் மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் சிக்கி மூன்று சிப்பாய்கள் காயமடைந்தனர்.

# சமாதான முயற்சியை முன்னெடுப்பதற்கு

# சந்திரிகா - ரணில் சந்திப்பில் இணக்கம்

## தேசிய அரசு குறித்தும் ஆராய்வு; பேச்சு விவரங்கள் இரகசியம்

கொழும்பு,ஜூன்23

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நேற்று இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் -**

**இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதான முயற்சியை முன்னெடுக்க இணக்கம் காணப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

**தேசிய அரசு ஒன்றை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து இரு தலைவர்களும் ஆராய்ந்திருப்பர் என்றும் ஆனால் அந்த விவரங்கள் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளதாகவும் செய்தி ஏஜென்ஸிகள் பலவும் தெரிவித்துள்ளன.**

இரண்டு தலைவர்களுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பெனக் கருதப்பட்ட நேற்றைய சந்திப்பு நேற்று முற்பகல் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது. அது ஒரு மணித்தியாலம் நீடித்தது. வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மட்டுமே இரு தலைவர்களுடனும் பிரசன்னமாக இருந்தார்.

நோர்வேயின் உதவியுடன் நடைபெறும் சமாதான முயற்சியை குழப்பாதிருக்கவேண்டும் என ஜனாதிபதி கேட்டுக் கொண்டதற்கு ரணில் இணக்கம் தெரிவித்தார் என அறிவிக்கப்படுகிறது.

நேற்றைய பேச்சுக்களின் போது தற்போது சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து பேணுவதற்கு ஆக்கபூர்வமான பேச்சுக்களில் தொடர்ந்தும் ஈடுபட இரு தலைவர்களும் இணங்கி

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி தடுக்க முனைந்தால் தகுந்த நடவடிக்கை எடுப்போம்

### கரு ஜயசூரிய நேற்று அறிவிப்பு

கொழும்பு,ஜூன்23

நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் இடம்பெறுவதற்கு முன்னர் -

அவசரகாலச் சட்டத்தின் கீழோ நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தியோ ஜனாதிபதி, பிரேரணை மீதான விவாதத்தையும் வாக்கெடுப்பையும் தடுக்க முடியாது.

ஜனாதிபதி அவ்வாறு முயன்றால் அந்த நேரத்தில் அதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இப்படிக் கூறியுள்ளார் ஐ.தே.கவின் பிரதித்தலைவர் கரு ஜயசூரிய.

நம்பிக்கையில்லாப் பிரேரணையைச் சமர்ப்பித்த பின்னர் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தப் பிரேரணைக்கு ஆதரவு தெரிவித்து கைச்சாத்திட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அரசுத் தரப்பைச் சேர்ந்த 18 உறுப்பினர்களின் ஆதரவும் எமக்குக் கிடைக்கவிருக்கின்றது.

(14ஆம் பக்கம் பார்க்க)

### நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு கூட்டணி ஆதரவளிப்பது ஏன்?

## இனப்பிரச்சினை விடயத்தில் சந்திரிகா அரசு 'புருடா' விடுவது இப்போதுதான் தெரிகிறது!

### இப்படிக் காரணம் கூறுகிறார் ஆனந்தசங்கரி

கொழும்பு,ஜூன்23

ஐக்கிய தேசியக் கட்சியால் அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவளிப்பது ஏன்?

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்கப்போவதில்லை என்று த.வி. கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் வீ.ஆனந்த சங்கரி அறிவித்திருந்தார். கூட்டணியின் தலைமையும் அதே நிலைப்பாட்டையே கொண்டிருந்தது.

ஆனால் தற்போது நிலைமை தலைகீழாக மாறிவிட்ட நிலையில்-

நோர்வேயின் மத்தியஸ்தம் மூலமாக சந்திரிகா அரசு இனப்பிரச்சினைத் தீர்வைப் பெற்றுத்தரும் என நாம் நம்பிச் செயற்பட்டோம். ஆனால் தற்போதுதான் இதுவரை அரசாங்கம் செய்துவந்தது எல்லாம்'புருடா' எனத்தெரியவந்துள்ளது. -

இவ்வாறு நேற்றுத் தெரிவித்திருக்கின்றார் சங்கரி.

த.வி. கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் ஆனந்தசங்கரி கொழும்பில் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய அரசாங்கத்தின் மீது நாங்கள் நம்பிக்கை வைத்திருந்தோம். அதனை இழக்கச் செய்யும் வகையிலேயே கடந்த ஆறு வருடங்களாக அரசாங்கம் நடந்து

(14ஆம் பக்கம் பார்க்க)

## அரசைக் கவிழ்ப்பதற்கு துணை போகமாட்டோம்

### அமைச்சர் டக்ளஸ் அறிவிப்பு

கொழும்பு,ஜூன்23

தற்போதைய அரசைக் கவிழ்ப்பதற்கு ஈ.பி.டி.பி. ஒருபோதும் துணை போகமாட்டாது. ஜனாதிபதி மீது எமக்கு முழு நம்பிக்கை உண்டு.

இவ்வாறு கூறுகிறார் ஈ.பி.டி.பியின செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா.

இது குறித்து ஈ.பி.டி.பி. அமைப்பு நேற்றிரவு விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீதும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் மீதும் எமக்கு முழு நம்பிக்கை உண்டு. எனவே தற்போதைய அரசாங்கத்தைப் பாதுகாக்கும் வகையில் ஈ.பி.டி.பி. தனது சகல

(14ஆம் பக்கம் பார்க்க)

### பொலீஸ் பாதுகாப்புடன் பஸ்களில்

## நயினை செல்லும் பக்தர்களுக்கு சோதனை மேல் சோதனை!

யாழ்ப்பாணம்,ஜூன்23

நயினை அம்மனின் பக்தர்கள் வழமைபோல் இம்முறையும் படையினரின் கடும் சோதனைகளுக்கு மதியில் உடல் களைத்து - மனம் சோர்ந்த நிலையிலேயே அங்கு செல்கின்றனர்.

யாழ்நகரில் இருந்து நயினாதீவுக்கு புறப்படும் பக்தர்கள் அனைவரும் முதலில் யாழ்.பஸ்நிலையப் பகுதியில் வைத்து கடுமையான உடற் சோதனையின் பின்னர் பஸ்களில் ஏற்றப்படுகின்றனர். பொலீஸார் பஸ்களின் போக்குவரத்துக்கு பாதுகாப்பு வழங்குகின்றனர்.

பின்னர் பக்தர்கள் அனைவரும் அல்லைப்பிட்டியில் உள்ள கடற்படையினரின் சோதனைச்சாவடியில் பஸ்களில் இருந்து இறக்கப்பட்டு நீண்ட வரிசையில் நிறுத்தப்பட்டு, சோதனையின் பின்னர் அடையாள அட்டைகள் பெறப்பட்டு அங்கு "விசேட பாஸ்" வழங்கப்பட்டு பயணத்தைத் தொடர அனுமதிக்கப்படுகின்றனர்.

இந்தச் 'சோதனை'களுடன் குறிகாட்டுவான் சென்றடையும் பக்தர்களின் உடைமைகள் மற்றும் பூசைப்

(14ஆம் பக்கம் பார்க்க)

### திருநெல்வேலிப் பகுதியில் சூட்டுக்கு இலக்கான

## இரு இளைஞர்களின் சடலங்கள் யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்23

திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச சம்பவம் ஒன்றில் உயிரிழந்ததாகத் தெரிவித்து இரு இளைஞர்களின் சடலங்களை கோப்பாய் பொலீஸார் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைத்துள்ளனர்.

இரு சடலங்களிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

இவ்விரு இளைஞர்களும் சைக்கிளில் சென்றுகொண்டிருந்ததாகவும்-

அந்தப் பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் விசாரணைக்காக அவர்களை மறித்ததாகவும் -

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

தீவக லயன்ஸ் கழகம்

We Serve

# பிற்போடப்பட்டுள்ளது

தீவக லயன்ஸ் கழக ஆதரவில்
நாளை (24-06-2001) ஞாயிற்றுக்கிழமை
நடைபெறவிருந்த
"நலிவுற்றோர் நலன்காக்கும் நிதிக்கான"
அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தினால் எதிர்வரும் 29-07-2001 ஞாயிறன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

கௌரவ செயலாளர்
தீவக லயன்ஸ்கழகம்.

(89344)



## நல்லூர் பிரதேச சபை
# மின்பிறப்பாக்கி வழங்கல்

எமது பிரதேச சபைக்கு கீழ்க்குறித்த வகையான மின்பிறப்பாக்கி தேவைப்படுவதால் தகுதிவாய்ந்த வழங்குநர்கள் 28-06-2001ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக "தலைவர், நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி" என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.

மின்பிறப்பாக்கி வகை:- லிஸ்ரர் இங்கிலாந்து (Lister England)
8 - 10 KVA 3 phase

*நல்லூர் பிரதேச சபை,*
*திருநெல்வேலி,*
*19-06-2001*

க.மணிபல்லவராஜன்,
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.

(C/17179)



# SHOTOKAN KARATE - DO INTERNATIONAL FEDERATION
## JAFFNA - SRILANKA

மேற்படி கழகத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவையொட்டிய
கராத்தே, பழுதூக்கும் போட்டிகளும்
# பரிசளிப்பு விழாவும்

*காலம்:*

| | | |
|---|---|---|
| பழுதூக்கும் போட்டி | 2001.06.23 காலை 09.00 மணி | (S.L.T) |
| கராத்தே | 2001.06.24 காலை 09.00 மணி | |
| பரிசளிப்பு விழா | 2001.06.24 மாலை 04.00 மணி | |

*இடம்:* யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை

*பழைய பொலீஸ் நிலையம்,*
*மானிப்பாய் வீதி,*
*ஆனைக்கோட்டை.*

ஆசிரியர், மாணவர்கள்.
S.K.I.F. JAFFNA

(89357)




## கோப்பாய் ஆசிரிய கலாசாலை
# ஆசிரிய மாணவ உள்ளங்களின் நன்றித்துளிகள்

உப அதிபர்
செல்வி **விஜயராணி வேலுப்பிள்ளை** அவர்கள்
(இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் 11 ).

இக் கலாசாலையை நிர்வகித்த அன்னையர்கள்
வரிசையில் பாசமுள்ள தாயாக எம் மனங்களில்
இரண்டறக் கலந்து, எம்மைப் பூரண ஆளுமையுடைய
மனிதர்களாக்க அல்லும் பகலும் அயராது உழைத்த
எமது அன்பு அம்மா அவர்களுக்கு இன்று
60 ஆவது பிறந்தநாள். இந் நன்னாளில் நெஞ்சம்
நிறைந்த நன்றிகளை அன்புடன் செலுத்தி
அவர் பல்லாண்டு காலம் வாழ
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

(89353) - ஆசிரிய மாணவர்கள்.


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| பூலோகத்தில் | பரலோகத்தில் |
|---|---|
| 26 - 12 - 1945 | 23 - 05 - 2000 |

கர்த்தருக்குள் நித்திரையடைந்த
## திருமதி பூபாலசிங்கம் பரமேஸ்வரி (விதியாள்)

ஓராண்டு அல்ல, எத்தனை ஆண்டுகள்தான் சென்றாலும்
உங்கள் நினைவு, எங்கள் நெஞ்சங்களை
விட்டு என்றுமே அகலாது.

அபிமன் (மகன்)
(யாழ். பல்கலைக்கழகம்)
கணவர் - பூபாலசிங்கம்

*சேச் லேன்,*
*கொக்குவில் மேற்கு.*

(89347)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன்23

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் முதன்மை நிலை ஒன்றுக்கான வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை ஞாயிறு காலை 8.45மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி வை.யோகேஸ்வரன் கலந்து கொள்வார். திருமதி யாழினி யோகேஸ்வரன் பரிசில்களை வழங்குவார். (க)

## 226 தபாற் பொதிகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம்,ஜூன்23

காங்கேசன்துறைக்கு நேற்று முன்தினம் வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 226 பொதிகள் எடுத்து வரப்பட்டன.

அதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 48 பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டதாகத் தபாற்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ம-10)

## புதுயுகத்துக்கான வழிகாட்டல் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜூன்23

யாழ்.கல்வி வலயத்தின் 3 பாடசாலைகளில் தற்பொழுது நடைபெற்று வருகின்ற 'புதுயுகத்துக்கான வழிகாட்டல் மாணவர் ஆக்கத்திறன் கண்காட்சியை' குடாநாடு முழுவதிலுமுள்ள மாணவர்களும் இன்று பார்வையிடுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

தரம் 1 தொடக்கம் 5 வரையான மாணவர்களுக்கான கண்காட்சி யாழ்.சன்மார்க்க வித்தியாலயத்திலும் -

தரம் 6 தொடக்கம் 9 வரையான மாணவர்களுக்கான கண்காட்சி வண்ணை நாவலர் வித்தியாலயத்திலும் -

தரம் 10 தொடக்கம் 13 வரையான மாணவர்களுக்கான கண்காட்சி வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் -

ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இக் கண்காட்சியைப் பெற்றோர்கள் மற்றும் ஆர்வலர்களும் பார்வையிடலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-10)

## சிறைக்காவலர் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூன்23

சிறைச்சாலையில் கடமையாற்றுவோருக்கான தரம் II சிறைக் காவலர் தேர்வுப் பரீட்சை இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்.சிறைச்சாலையில் கடமையாற்றுகின்ற 6 பேர் இந்தப் பரீட்சையில் தோற்றவுள்ளனர்.

(ம-10)

## 34ஆவது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம்,ஜூன்23

கைதடி நவீல்ட் செவிப்புலனிழந்தோர் பாடசாலையின் பழைய மாணவர் சங்க 34ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்தப் பொதுக்கூட்டமும் இன்று காலை 8.30 மணிக்கு சுண்டுக்குளி சென்.ஜோன்ஸ் அக்கடமியில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் விருந்தினர் உரைகளை நவீல்ட் பாடசாலை அதிபர் திருமதி ஏ.சந்திரபத்மபாலன், பளைப் பிரதேச செயலாளர் க.புத்திசிகாமணி, யாழ்.தொழில்நுட்பக்கல்லூரி அதிபர் க.செந்தில்நாதன், யாழ்.றோட்டறிக் கழகத் தலைவர் அ.பஞ்சலிங்கம், போரூட் முகாமையாளர் மரீன்பரினா செவிக் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

(ம-5)

## கருத்தரங்கு

சுன்னாகம் ஸ்கந்தா பல்கலைக்கழ மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான கருத்தரங்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இந்தக் கருத்தரங்கில் வணிக பீட மாணவர்களுக்கு முகாமைத்துவம் தொடர்பான கருத்துரையை யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக கற்கைகள் பீட விரிவுரையாளர் இ.விஜயகுமார் வழங்கவிருக்கின்றார்.

(க-3)

# இதய அஞ்சலி
## திருமதி நாகேஸ்வரி ஜெயராஜா

அவர்கள் 17.06.2001 அன்று கொழும்பில் இறைவனடி சேர்ந்த செய்தி அறிந்து ஆழ்ந்த அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம்.

அவரின் மறைவால் துயருற்றிருக்கும் **கணவர் ந.ஜெயராஜா** மற்றும் **பிள்ளைகளான: ஜனார்த்தனன், யதுநந்தனன்,** ஜெயநந்தனன ஆகியோரின் துயரில் நாமும் இணைந்து கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அத்தியடிப் பிள்ளையாரை வேண்டுகின்றோம்.

யாழ்.அத்தியடி J.78
சமுர்த்தி செயலணி உறுப்பினர்கள்.

(C/17187)

# கண்ணீர் அஞ்சலி

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின்
யாழ்.மாவட்டப் பிரதம அமைப்பாளா
**திரு.வேல்முருகு தங்கராசா** அவர்களின் அன்பு மாமியார்
## திருமதி பிரான்சிஸ் மெற்றலின்

அவர்களின் பிரிவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
**நிர்வாகத்தினர்**
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி,
யாழ்ப்பாணம்.

(89349)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பிரான்சிஸ் மெற்றலின்

யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த திருமதி பிறான்சிஸ் மெற்றலின் அவர்கள் 21.06.2001 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை - பிரான்சிஸின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தம்பு செல்லத்தின் அன்பு மகளும் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை - ஆச்சரியத்தின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான காணிக்கை, செல்லகுமாரத்தி, பொன்னரியம், நாரானி மற்றும் அருள்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சோதிமலர், யோசப் (கனடா), காலஞ்சென்ற துரைரெட்டினம் மற்றும் பொன்மணி, அன்ரன் ஜோர்ச் (கனடா), பிலோமினா (கனடா), றஞ்சி ஆகியோரின் அன்புத் தாயாரும் வேல்முருகு தங்கராசா (ஸ்ரீ.ல.சு.க. பிரதம அமைப்பாளர், யாழ்.), மேரியான் (கனடா), திலகரட்ணா (லெபனான்), ஜெயந்தினி (கனடா), அழகுராசா (கனடா), கிறீஸ்துராசா (டோகா) ஆகியோரின் அன்பு மாமியும் கருணாநிதி (யாழ்.மாவட்ட நீதிமன்றம்), விஜி (லண்டன்), கௌரி (லண்டன்), ஜெயா (கொழும்பு), சுபா, றோசானி, நீலன் (கனடா), ஜெனன், ஆன்சியா (கனடா), சுமதி, சமிந்தன், பியாந்தன் (கொழும்பு), பிரதீப், பிரசாந்த், பிரியா, பிரகாஸ், பிரியந்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது பூதவுடல் நல்லடக்கத்திற்காக அவரது இல்லத்தில் இருந்து இன்று (23.06.2001) சனிக்கிழமை பி.ப. 3.30 மணியளவில் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கருணாநிதி
(பேரன்)

*41/5, கொண்டடி வீதி,*
*குருநகர்.*

(89348)

## திருமதி சிவசக்தி சண்முகராசா

காங்கேசன்துறை வீதி, இணுவில் சந்தி, இணுவிலைச் சேர்ந்த திருமதி சிவசக்தி சண்முகராசா அவர்கள் 21.06.2001 வியாழக்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராசா சண்முகராசா (வை.சி.சி.கு.புகையிலைக் கடை உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் திருமதி கிருஸ்ணமாலா சிவபாதசுப்பிரமணியம், திருமதி கௌசல்யா சூரியகுமார் (கொழும்பு), செல்வி வானதி, செல்வி விநோதா (2ஆம் வருடம, சித்த மருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சு.சிவபாதசுப்பிரமணியம், வீ.சூரியகுமார் (சரஸ்வதி ஸ்ரோர்ஸ் உரிமையாளர், கொழும்பு) ஆகியோரின் மாமியாரும் கௌதமி, சூரியபிரசாத், சூரியபிரதீப், சூரியபிரசன்னா ஆகியோரின் பாட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.06.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு பொரளை மன்னம் பேரி மலர்ச்சாலையில் நடைபெற்று காலை 10.00மணிக்கு கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
வீ.சூரியகுமார்
(மருமகன்)

*சக்தி பவனம்,*
*காங்கேசன்துறை வீதி,*
*இணுவில் சந்தி,*
*இணுவில்.*

(89352)

## திருமதி பேரம்பலம் வள்ளியாச்சி

வட்டுக்கோட்டை பிலவத்தை கற்பகச் சோலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பேரம்பலம் வள்ளியாச்சி நேற்று (22.06.2001) வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணியளவில் ஓட்டுமடத்தில் அன்னாரது மகளின் இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - இலட்சுமிப்பிள்ளையின் அன்பு மகளும் ஓய்வு பெற்ற அதிபர் பேரம்பலம் உபாத்தியாயரின் அன்பு மனைவியும் நல்லையா, திருமதி பூரணம் சின்னத்துரை, கணேசு, திருமதி பஞ்சாயுதம் தம்பிப்பிள்ளை, அரியநாயகம், திருமதி அரியமலர் நல்லையா ஆகியோரினதும் மற்றும் வேலாயுதத்தின் அன்புச் சகோதரியும் கமலநாயகி, புவனநாயகி, கிருஷ்ணபாலன் (டென்மார்க்), ஜெயபாலன் (ஐக்கிய இராச்சியம், ஓய்வுபெற்ற நீர்ப்பாசனத் திணைக்கள உதவிப் பொறியியலாளர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் முருகையா, காலஞ்சென்ற நடராசா, ஜோதிமலர் (டென்மார்க்), சறோஜாமலர் (U.K) ஆகியோரின் அன்பு மாமியாரும் திருமதி ராஜசிவன் ரமணி (பிரான்ஸ்), உதயகுமார் (கனடா), திருமதி தவேந்திரன் சுகந்தி, திருமதி குகன் சுபாஜினி (ஹொலண்ட்), சுதர்சினி, பிரதீப்பிரசன்னா, சங்கீதா, கமலகுமார், கௌசல்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் சிவசுதன், அருண், ஆர்த்தி, வனஜாஜெனிபா, டக்ஷன் ஆகியோரின் அன்புப் பீட்டியுமாவார்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்கான சர்வமதப் பிரார்த்தனை இன்று (23.06.2001) சனிக்கிழமை காலை 9.00மணி தொடக்கமும் இறுதிக்கிரியைகள் நண்பகல் 12.00 மணியளவில் கீழ்க்காணும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

தகவல்:
மு.க.முருகையா (மருமகன்)
(ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்)

*"கமல பதி",*
*571/1, மானிப்பாய் வீதி,*
*ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.*

(89354)

## மேலும் அகதிகளாகும் நிலை வேண்டாம்

ஜூன் இருபதாம் திகதி உலக அகதிகள் நாளாக ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த வகையில் முதலாவது அகதி நாள் புதன்கிழமையன்று அனுஷ்டிக்கப்பட்டது.

அகதிகள் நாள் ஒன்றை பிரகடனப்படுத்தி அனுஷ்டிக்கப்பட வேண்டிய அளவுக்கு, அகதிகளைப் பராமரிக்கும் விவகாரம் உலகத்தின் முதன்மைப் பிரச்சினைகளில் ஒன்றாக மாறியுள்ளது.

உலக அகதிகளுக்கென ஐக்கிய நாடுகள் சபை புறம்பான தூதரகம் ஒன்றை - தனிப்பிரிவு ஒன்றை - நிறுவவேண்டிய தேவை பல ஆண்டுகளுக்கு முன்னர் உருவாகியது. எனினும் அகதிகளின் எண்ணிக்கை மேன்மேலும் பெருகியதால் மேற்படி தூதரகம் தனது பணிகளை விஸ்தரிக்க வேண்டியதாயிற்று.

உள்நாட்டுச் சண்டைகள், நாடுகளுக்கு இடையேயான போர்களின் விளைவாக உலகத்தில் மொத்தம் மூன்று கோடியே இருபது லட்சம் பேர் அகதிகளாக வாழ்வதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

தமது சொந்த இடங்களை விட்டும், செய்த தொழில்களை இழந்தும், அவதியுறும் அகதிகளைப் பராமரிக்க - அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க - கோடானு கோடிக் கணக்கான டொலர்கள் செலவாகின்றன. அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்துவருவதால், அவர்களைப் பராமரிப்பதற்கு ஐ.நாவுக்கு நிதிப்பற்றாக்குறையும் உண்டாகிறது.

போர் என்பது மக்கள் அழிவு உட்பட பல வகை அழிவுகளைத் தருகிறது. பெருமளவு பணம் வெந்து போகிறது. போரின் பக்க விளைவான அகதிகள் பராமரிப்புக்கும் பெரும்பணம் வேண்டியுள்ளது.

ஆனால், உலகளாவிய ரீதியில் பல கோடி மக்கள் பட்டினி கிடக்கிறார்கள். போருக்கு - அழிவுக்கு - செலவிடும் பணத்தை மிச்சப்படுத்தினால் பட்டினிச் சாவுகளை நிறுத்தலாம்.

அகதிகள் பிரச்சினையை எதிர்நோக்கும் - அதற்கு முகம் கொடுக்க வேண்டிய ஆசிய நாடுகளில்-முதன்மை பெறும் நாடுகளில் இலங்கை குறிப்பிடத்தக்கது. வடக்கு - கிழக்கில் தொடர்ந்து பதினெட்டு வருட காலமாக நடைபெறும் உள்நாட்டுப் போரினால் தமிழ் மக்களில் பெரும் சதவீதத்தினர் அகதிகளாக - இடம் பெயர்ந்தவர்களாக - அவலப்படுவது இந்த நாட்டின் பெரும் சாபக்கேடாகி விட்டது.

இலங்கையில் உள்ள அகதிகளுககான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் பதில் ஸ்தானிகர் அலன் வேர்ணன் வெளியிட்ட தகவலின் பிரகாரம், வடக்கு - கிழக்குப் போரின் காரணமாகச் சுமார் எட்டு லட்சம் பேர் நாட்டுக்குள் அகதிகளாகி உள்ளனர். மேலும் எட்டு லட்சம் பேர் அகதி அந்தஸ்துக் கோரி வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்துள்ளனர். இரண்டும் சேர்ந்து, நாட்டின் 8.32 சதவீத மக்கள் அகதிகளாகியுள்ளனர். இவர்களில் சுமார் 98 சதவீதத்தினரும் தமிழ் மக்கள் என்று கணக்கிடலாம்.

உள்நாட்டுப் போராக இருந்த போதிலும் இரண்டு நாடுகளுக்கு இடையில் நடைபெறும் யுத்தம் போலவே அது நடைபெறுகின்றது. போரில் ஈடுபட்டுள்ள இரண்டு தரப்புகளும் அதிநவீன போர்த் தளபாடங்களை வைத்திருக்கின்றன.

இதனால் மக்கள் அழிவும், பொருளாதார மற்றும் வகை அழிவுகளும் எல்லையை மீறிச் சென்றுள்ளன. இப்போதைய கட்டத்திலாவது போர் நிறுத்தபடாவிடில், தமிழர் பிரதேசம் முற்றாகச் சிதைந்து போகும் பேராபத்து உண்டு.

இப்போதே தமிழர்கள் ஒன்றுக்குப் பல தடவைகள் இடம்பெயர்ந்து இடம்பெயர்ந்து வாழ்க்கையில் விரக்தி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். அவர்கள் சரியான முறையில் பராமரிக்கப்படவில்லை. உடல், உளத்தாக்கங்கள் சர்வசாதாரணமாகிவிட்டன. போசாக்கின்மை மற்றும் பல நோய்த் தாக்கங்களால் எதிர்காலச் சந்ததியினரான குழந்தைகள், சிறுவர்கள் மிக மோசமான நிலையில் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

அகதிகள் வீதாசாரம் மேலும் உயராமல் தடுக்கப்பட வேண்டும். அதற்கான ஒரே மார்க்கம் போரை முடிவுக்குக் கொண்டு வருதலே.

## சாத்திரியாரின் சாப்பாட்டுக் கடை

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு முன்னாலுள்ள சாத்திரியாரின் சாப்பாட்டுக்கடை பற்றியும், அங்கே வந்து போகும் 'கொமிசனர்' பற்றியும் முன்னொரு கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன். அவரைப் போலவே இவருக்கும் சொந்தப் பெயருக்குப் பதிலாக சாத்திரியார் என்ற பெயரே நிலைத்து நின்று விட்டது. கல்லூரியின் நண்பகல் இடைவேளையின் போது அங்கு வியாபாரம் அமோகமாக நடக்கும் என்றாலும் கடை என்னவோ சுண்ணாம்புச் சுவரிலான ஓலைக் கொட்டகைதான். உள்ளே வகுப்பறையை நினைவூட்டுவது போல வரிசையாக நீளமான வாங்கு மேசைகள் போடப்பட்டிருக்கும். கடையின் முன்பக்கத்தில் மேசை நாற்காலியும் "பொயிலரும்" நாற்காலியும் (பெயருக்குத் தான்) இருக்கும். அதிலே சாத்திரியாரோ, பின்னால் வரப்போகின்ற அவரது மனைவியோ அமர்வதென்பது அபூர்வத்திலும் அபூர்வம்.... தேநீர்க்கடை, சாப்பாட்டுக் கடை என்பது தெரிய வேண்டும் என்ப தற்காக அப்போதெல்லாம் இந்த "பொயிலரை" கடைக்கு முன்னர் தான் வைத்திருப்பார்கள். அதற்கு முன் நின்று தேநீரை அடித்து ஆற்றுவதே ஒரு விளம்பரம் தானே....? தற்போதைய கொத்து றொட்டி, அப்பக்கடை போல... அந்த ஓசை ஒலியுடன் தெருப்புழுதியும் சேரவேண்டும்....

சாத்திரியாரின் கடையில் 'இடம் கிடைக்காது உணவு கிடைக்காது' என்று நினைப்பவர்கள் மானிப்பாய் ஆலடிச் சந்திக்குத் தான் வரவேண்டும். அங்கேயும் அப்போது இரண்டு சாப்பாட்டுக் கடைகள் இருந்தன. அங்கு வியாபாரத்துக்கு குறைச்சல் இல்லை. இருந்தாலும் சாத்திரியார் கடைச் சாப்பாடு 'ஏ வண்' என்பதால் உங்களை மீண்டும் அங்கேயே அழைத்துச் செல்கின்றேன்.

சாத்திரியார் நாலுமுழ வேட்டியை மடித்துக் கட்டியிருப்பார். அவர் சேட் அணிந்து நாம் பார்த்ததில்லை. உடம்பு முழுவதும் வீபூதி சந்தனத்தை அழுத்திப் பூசி இருப்பார். எந்த நேரத்திலும் சுறுசுறுப்பாக இயங்கியவாறு இருப்பார். உரத்த அதிகாரத் தொனியில் தான் கதைப்பார். ஆனால் சண்டைக்காரர் அல்லர். எல்லாவற்றையும் சமாளிக்கக் கூடியவர்.

அவருக்குச் சோதிடமும் தெரிந்திருக்க வேண்டும். 'அமளி' குறைந்த நேரங்களில் பஞ்சாங்கமும் கையுமாக அந்த நாற்காலியில் (அது தான் ஏற்கனவே சொன்னேனே அபூர்வம் என்று) இருந்து ஏதோ குறிப்புக்கள் எழுதிக் கொண்டிருப்பார். அதை விட சீட்டுக் கொம்பனி நடத்தியதாகவும் தெரிய வருகிறது. 'கொமிஷனர்' அங்கு வந்து போவது கூட 'அது' சம்பந்தமாகத்தானாம். கல்லூரி ஆசிரியர்கள் சிலர் கூட இவரிடம் சீட்டுப் பிடிப் பார்களாம். பண் வசூலுக்காக ஒரு சில உயர் வகுப்பு மாணவர்களை உத வீக்கு வைத்திருந்தாராம்....

### வாழை மடலில் சாப்பாடு

சாப்பிடப் போனால் அந்த வேலையை முடித்துக் கொண்டு போவதற்குப் பதில் உந்தத் 'துளவாரங்கள்' எல்லாம் எதுக்கென்று நீங்கள் கேட்பதற்கு முன் வந்த வேலைக்கு வருகிறேன்....

அக்காலத்தில் உணவகங்களில் வாழையிலையை விட வாழை மடல்கள் தான் அதிகமாகப் பாவிப்பார்கள். காய்ந்த வாழை மடல்களை அளவளவாக வெட்டி பொருத்திக் கட்டுக்கட்டுகளாக விற்பனைக்கு வரும். இந்தக் கட்டுக்கள் பெருமளவில் கொழும்பு போன்ற நகரங்களுக்கும் ஏற்றுமதியாவது உண்டு. சாத்திரியார் கடையிலும் இத்தகைய வாழைமடல்களில்தான் உணவுகள் வழங்கப்படும். உணவு என்றால் தோசை, இடியப்பம், இட்லி, பிட்டு.... இவைகள்தான்.




அது மதிய உணவு தான் என்றாலும் சோறு சாப்பிடுவதில் எவரும் அக்கறைப்படுவதில்லை. வடை, வாய்ப்பன் போன்ற சிற்றுண்டிகளுக்கு மட்டும் அலுமினியத் தகடுகள்....

சாத்திரியார் அனேகமாகத் தனியாக நின்றே எல்லாவற்றையும் கவனிப்பார். முதல் சுற்றில் எல்லாருக்கும் உணவு பரிமாறி விட்டு அவர்களுக்குத் தேநீரும் போட்டுக் கொடுப்பார். 'கட கட' என்று தேநீர் கலந்து மிக நீளமாக உயர்த்தி ஆத்துவார். தகர மூக்குப் பேணிகள்தான் அப்போதெல்லாம் தேநீர் கடைகளிலும் தண்ணீர்ப் பந்தல்களிலும் புழக்கத்தில் இருந்தன. எச்சில்படுத்தாமல் அண்ணாந்து குடிப்பதற்கு அவைகள் ஏற்றன. கிளாஸ் பயன்படுத்தப்படாததற்கு காரணம் ஒருவேளை சாத்திரியார் போன்றவர்களின் அடித்து ஆத்துதலுக்கு நின்று பிடிக்காது என்பதாக இருக்குமோ?

இடம் காலியாக காலியாகப் புதியவர்களுக்கு உணவு பரிமாறப்படும். ஓடி வந்து மீண்டும் மீண்டும் தேநீர் போடுவார். மேசையடிக்கு வந்து பணமும் பெற்றுக்கொள்வார். ஒவ்வொருவரும் தாம் தாம் எடுத்தவை என்ன என்பதைச் சொல்லிப் பணத்தைக் கொடுப்பார்கள்....

நெருக்கடியான சமயங்களில் ஓய்வு கிடைத்தால் சாத்திரியாரின் மனைவியும் உதவிக்கு வருவார். மேசைக்கு முன் நின்று பணம் பெறுவது தான் அவரின் முக்கிய வேலையாக இருக்கும். தேநீரும் போடுவதுண்டு, என்றாலும் அது ஆர்ப்பாட்டம் இல்லாத 'நீளம்' குறைந்ததாகத்தான் இருக்கும். இவர் காட்சிக் கு எளியராக இருந்தாலும் உள்ளே சமையலுக்கும் உணவுப் பண்டங்களின் சுவைக்கும் காரணமாக இருந்திருக்கிறார்....

நானும் சாத்திரியார் கடையில் சாப்பிட்டிருக்கிறேன் என்பது குறிப்பிடத் தக்கது. வீட்டிலே சாப்பாடு கட்டித்தருவார்கள். பூவரசம் இலையில் சூடு ஆறாத நிலையில் அவசரத்தில் வைத்து கட்டிய உணவு சாப்பிடும் சமயம் உள்ள சுவையும் இழந்து .... அதை விடக் கல்லூரிப் பிரார்த்தனை முடிந்து வகுப்புக்குள் நுழைந்து பார்த்தால் அலுமாரிக்குள் வைத்த மாணவர்களின் சாப்பாட்டுப் பொதிகளை நாய்கள் களவாடியிருக்கும். இப்படி எப்போதாவதுதான் நடப்பது உண்டு. இதைச் சாட் டாக வைத்து கடைச் சாப்பாட்டுக்கே பெரும்பாலும் பணம் பெற்றுச் செல்வேன். இருபது சதம் கிடைத்தால் மூன்று தோசையும் ஒரு பால் தேநீரும்..... இருபத்தைந்து சதம் கிடைத்தால் கூடவே கடலை, நெல்லிக்காய், ஜம்புக்காய் என்று அவற்றுக்குப் பணம் தேறும். அந்த வாழை மடலில் சட்ணியுடன் சேர்த்துச் சாப்பிட்ட தோசையை நினைக்கும் போது இப்பொழுதும் வாயூறும் .... ஆகா என்ன சுவை.... இப்பொழுதும் தான் தோசை சுடுகிறார்கள், சம்பலும் 'சரிக்கட் 'டுகிறார்கள், வெள்ளித் தட்டில் வேறு வைத்துத் தருகிறார்கள். இருந்தாலும் அது போல வருவதில்லையே!

*பின் குறிப்பு:* சத்தியமாகச் சொல்லுகிறேன் சாத்திரியாரின் மனையாள் மனையியல் டிப்ளோமா எதுவும் பெற்றதில்லை.

*- சண் அங்கிள் -*

## நாளை

ஆனி 10
ஞாயிற்றுக்கிழமை
திதி: திருதியை
நண்பகல் 11.55 வரை
நட்சத்திரம் : பூசம்
பிற்பகல் 3.02 வரை
சதுர்த்தி விரதம்
சுபநேரம் : 8.55 - 10.25
ராகுகாலம் : 4.25 - 5.55
(பழைய நேரப்படி)

## முன் பள்ளி ஆசிரியர் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜுன்23

நல்லூர் பிரிவு முன்பள்ளி ஆசிரியர் சங்கக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்வியங்காடு வன்னியசிங்கம் படிப்பகத்தில் தலைவர் திருமதி மாலதி தேவி விவேகானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம)

## உதயவாக்கு

வேளையறிந்து பேசு; நாளையறிந்து பிரயாணம் செய்.

## நாட்டு நடப்பு

கையை வெட்டடா! காலை வெட்டடா!
கழுத்தைக் கொஞ்சம் இழுத்து வெட்டடா!
ஐய்யோ! ஐய்யோ!! அடிக்காதை யென்று
அலறித் துடிக்கிறான் ஆண் ஒருவன்
காவலரும் அயலவரும் கத்தியோடு சென்று
கதவை தள்ளி, திறந்து பார்த்தால்
பாவமந்த கிழட்டு 'ரெயிலர்' மகனுக்கு
பழக்கிறான் கோட்டு சூட்டு வெட்ட.

*- விகடகவி -*

வட்டுக்கோட்டை, சித்தன்கேணிப் பகுதிகளில்

## ஊரடங்குச் சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்தக் கோரிக்கை

### சிறுவர் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

வலிமேற்கு,ஜூன்23

வட்டுக்கோட்டை மற்றும் சித்தன் கேணிப்பகுதிகளில் ஊரடங்குச்சட்டத்தைக் கடுமையான முறையில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு படை அதிகாரிகளிடம் கோருவது என்று வலிகாமம் மேற்கு பிரதேச சிறுவர் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வலிகாமம் மேற்குப் பிரதேச சிறுவர் பாதுகாப்புக் குழுக்கூட்டம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை காலை 10மணியளவில் பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கிராம உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், சங்கானைக் கல்விக் கோட்ட உத்தியோகத்தர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வட்டுக்கோட்டைப் பகுதிகளில் ஊரடங்குச்சட்டம் நடைமுறையில் உள்ள இரவு நேரங்களில் மதுபானம் அருந்திவிட்டு மாணவர்களின் கல்விக்கு இடையூறாக வீதிகளில் பலர் கூக்குரலிட்டபடி செல்கின்றனர் என்றும் சண்டை சச்சரவுகளில் ஈடுபட்டு இடைஞ்சல் செய்கின்றனர் என்றும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

ஊரடங்குச் சட்டத்தை உரிய அதிகாரிகள் கடுமையான முறையில் நடைமுறைப்படுத்தினால் இவ்வாறான அடாவடித்தனங்களைத் தடுக்க முடியும் என்றும் கூறப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 513ஆவது படையணி அதிகாரிக்கு பிரதேச செயலர் இது தொடர்பாக கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

★ பாடசாலை மாணவர்களுக்கு வீதி ஒழுங்கு பற்றிய வகுப்புக்களை நடத்துவது.

★ பாடசாலை மட்டத்தில் சிறுவர் பாதுகாப்புக் குழு ஒன்றை ஆரம்பிப்பது. (க-175)

## சுத்திகரிப்பு தொழிலாளரின் கோரிக்கைகள்: திருப்தியான முடிவை பெற்றுத் தருக!

### யாழ்.மாநகர சபை உறுப்பினர்களிடம் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜுன்23

யாழ்.மாநகர சபையில் கடமையாற்றும் சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் கோரிக்கைகளைப் பரிசீலித்து சபையின் அனைத்துக் கட்சிகளின் உறுப்பினர்களும் திருப்தியான முடிவைப் பெற்றுத்தர வேண்டும்.

- இவ்வாறு ஐக்கிய இலங்கை ஸ்தல ஸ்தாபன தொழிலாளர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை, யாழ். மாநகர சபை உறுப்பினர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி சங்கத்தினால் வெளியிடப்பட்ட பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.மாநகர சபையின் சுத்திகரிப்புக் கடமைகளில் ஈடுபடும் நாம் நீண்ட காலமாகவே எமது கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கோரி வந்த போதும் அவை உதாசீனம் செய்யப்பட்டே வந்துள்ளன.

எமது கோரிக்கைகள் தொடர்பாக முதல்வர் என்.ரவிராஜின் பொறுப்பற்ற பதில்களே எம்மை வேலைநிறுத்தப் போராட்டம் வரை செல்ல வைத்தது. கடந்த 16 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரை நாம் நடத்திய வேலைநிறுத்தப் போராட்டம் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈ.பி.டி.பி. அமைப்புக்களைச் சேர்ந்த சபை உறுப்பினர்களின் வேண்டுதலைத் தொடர்ந்து தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

மீண்டும் நாம் ஏமாற்றப்பட்டால், மேலதிக நடவடிக்கைகள் மேற் கொள்வதைத் தவிர்க்க முடியாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



இடிந்து சிதைந்திருக்கும் வீடுகளுக்குள் இருப்பதைத் திர (சுரு)ட்ட நுழையாதீர்கள்! அங்கு புதைந்திருக்கக் கூடிய கண்ணிகள் உங்களைப் பலியெடுக்கக் காத்திருக்கின்றன.....!!

# விற்பனையாகின்றது!
## பதநீர்

''கற்பகமாம் பனை மரத்தின் கனிவுமிக்க பாளையிலே அற்புதமாய்ச் சொட்டுகின்ற அருமையான பதநீர்''

பனை நிபுணர்
திரு. கே. சம்பந்தம்.

''புத்தம் புதிய பதநீர் போதை தரக்கூடியதல்ல. இந்துஸ்தானியில் இது நீரா எனப்படும். தினந்தோறும் காலையில் தேநீர் பருகுவதற்கு பதிலாக ஒரு குவளை பதநீர் பருகினால் காலையுணவாக வேறெதுவும் தேவைப்படாது''

- மகாத்மா காந்தி.

இயற்கையாகப் பெறப்படும் ஊட்டச்சத்துமிக்க இப்பானம் பனை அபிவிருத்திச் சபையின் சகல ''கற்பகம்'' விற்பனை நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

விலை ரூபா 5 மட்டும்!

பனை அபிவிருத்திச் சபை,
யாழ்ப்பாணம்.

(சி/17180)


## கண்ணீர் அஞ்சலி

எமது சகமாணவி
செல்வி சண்முகராஜா வினோதா
அவர்களின் அன்புத் தாயார்
### திருமதி சிவசக்தி சண்முகராஜா

அவர்கள் 21 - 06 - 2001 அன்று கொழும்பில் காலமானதை இட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

16 ஆம் அணியினர்,
சித்த மருத்துவத்துறை,
யாழ்ப்பாணம்.

(89340)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக அலுவலர்
திரு. ச. வேல்மாறன்
அவர்களின் அன்புத் தந்தையார்
### பொன். சபாபதி

அவர்களது மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மாவட்ட செயலக அலுவலர்களும்
நலன்புரிக்கழக உறுப்பினர்களும்.

மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம். (சி/17185)

## துயர் பகிர்கின்றோம்

எமது சக ஆசிரியர்
திரு. த. ரங்கநாயகம்
அவர்களின் அன்புத் தந்தை
### பொன்னையா றெமிசியஸ் தம்பிநாயகம்

அவர்களின் பிரிவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/ திருக்குடும்ப கன்னியர்மடம்.

(சி/17282)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். பிரதேச செயலகத்தைச் சேர்ந்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
போல் சிவநாயகம்
அவர்களின் அன்புத் தந்தையார்
### பொன்னையா றெமிசியஸ் தம்பிநாயகம்

அவர்கள் 21-06-2001 ஆம் திகதி அன்று காலமானதையிட்டுதுயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும்
அனைத்து உத்தியோகத்தர்களும்
நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம். (89332)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 23

அல்லைப்பிட்டி மண்கும்பான் சின்னக்காடு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவின் சிறப்பு நிகழ்வாக இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நற்கருணை நாதரின் சிறப்பு ஆராதனைகள் நடைபெறவுள்ளன.

நாளை ஞாயிறு காலை 7.30 மணிக்கு திருநாட் திருப்பலி இடம் பெறும். (ம-5)

★ ★ ★

யாழ். கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் ஆலயத்தின் அலங்கார உற்சவம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து 26 தினங்கள் நடைபெறவுள்ளது. (ம-10)

★ ★ ★

துன்னாலை மேற்கு மருதடி மித்தில் ஞான வைரவர் ஆலய கும்பாபிஷேக மண்டலாபிஷேக பூர்த்தி அஷ்டோத்தர சங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும். சிவஸ்ரீ ராம். சபாநாதக் குருக்கள் சங்காபிஷேகத்தை நடத்தி வைப்பார். (க-17)

★ ★ ★

கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலய மணவாளக்கோல வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை 8 மணிக்கு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகவுள்ளது. மாலை 4.30 மணிக்கு நடைபெறும் விஷேச பூஜையைத் தொடர்ந்து திருவூஞ்சல், வீதியுலா என்பனவும் இடம்பெறவுள்ளன. (ம-5)

தொல்புரம் துரையன் வளவு பிள்ளையார் மணவாளக்கோல சங்காபிஷேகம் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிறு பகல் நடைபெறவுள்ளது. நண்பகல் அன்னதானமும் விநாயகர் வீதியுலா வருதலும் இடம்பெறும். (ம-28)

★ ★ ★

கோப்பாய் மத்தி, நாவலடி ஸ்ரீ மகாமுத்துமாரி அம்பாள் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாக உள்ளது.

இன்று சனிக்கிழமை அதிகாலையில் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம் பெறும். (ம-10)

★ ★ ★

புங்குடுதீவு 12 தல்லையன் பற்று சங்கரமூர்த்தி முருகமூர்த்தி ஆலயத்தின் பிராயச்சித்த மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ம-10)

## சமய சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 23

வண்ணை ஸ்ரீவெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் வாராந்தம் நடைபெற்றுவரும் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வில் இன்று மாலை 4 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவராஜசர்மா '' சமயமும் சமூகவாழ்வும்'' என்றபொருளில் உரையாற்றுவார். (க-7)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ். திருமறைக் கலாமன்றத்தில் இன்று நடைபெற இருந்த கலை நிலா அரங்கு நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 30 ஆம் திகதி மீண்டும் இந்த நிகழ்வு இடம் பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் யாழ். மாவட்ட பாடசாலை மட்டப் போட்டிகளில் முதலிடம் பெற்ற திருக்குடும்ப கன்னியர் மட மாணவிகளின் ஏகலைவன் நாட்டுக்கூத்து இடம்பெறும். (ம)


## விற்பனைக்கு

வெங்காயம் பொதி செய்யும் நெற்பாக் (BAG), சகல அளவுகளிலும் உள்ள றெஜிபோம் சிற், றெஜிபோம் பெட்டிகள் மற்றும் புடைவைக்கடைக்கு உரிய கண்ணாடி சோக்கேஸ் என்பன விற்பனைக்கு உண்டு.

ஸ்ரீராம் நாதன் களஞ்சியம்
213 C, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T. P. 2916

(89342)


## பாராட்டிக் கௌரவித்தல்

இருபது வருடங்களுக்கு மேலாக எமது பிரதேசத்தில் கடற்றொழிலாளர் சமூக அபிவிருத்திக்கு, கடற்றொழிலாளர் அபிவிருத்தி அமைப்புக்களையும், கூட்டுறவுச் சங்கங்களையும் அமைப்பதற்கான ஆலோசனைகளை அந்தந்த வேளைகளில் வழங்கி, சங்கங்களையும் பதிவு செய்வித்து, சிறந்த முறையில் வழிகாட்டி, எமது சங்கத்தை ஒரு கிராம மட்ட 'கடற்றொழில் வங்கி' எனும் தகுதி நிலைக்கு முன்னேற்றுவதற்கு அயராது உழைத்தவரும், திவகத்தின் சமூக சேவையாளரும் பொதுநல வாதியுமாகிய

### லயன் சோமசுந்தரம் விக்கினேஸ்வரன்

(கடற்றொழில் பரிசோதகர் தரம் - I)
அவர்கள்

எமது பிரதேசத்தில் இருந்து இடமாற்றப்பட்டாலும் அவரது தன்னலமற்ற கடற்றொழிலாளருக்கான சேவைகளை நாம் மறந்துவிட முடியாது. அவரது கடந்த கால அளப்பரிய சேவைக்காக இடம்பெயர்ந்து வலிகாமம் மேற்கில் வசிக்கும் நீலங்காடு மீனவர் சமூகம் அவரைப் பாராட்டி, அவரின் சேவையானது மேன்மேலும் சிறப்புற வாழ்த்துகின்றது.

வலி.மேற்கில் இடம்பெயர்ந்து வசிக்கும் தொல்புரம் மேற்கு, நீலங்காடு மீனவர் சார்பில்
சுழிபுரம். பொ. கணேசு

(89347)

யாழ். பல்கலைக்கழக மெய்யியற் கழக
## சஞ்சிகை வெளியீட்டு நிதிக்கான நிகழ்வுகள்

பொலிகை ஒற்றுமை விளையாட்டுக்கழக வீரர்களால் நடாத்திக் காண்பிக்கப்படும்
### வீரதீரச் செயல்கள்

இடம்: மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு அரங்கு
காலம்: 24-06-2001 ஞாயிறு
நேரம்: பி. ப. 2.00 (புதிய நேரம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

மெய்யியற் கழகம்,
யாழ் .பல்கலைக்கழகம்.


விளம்பர உதவி:
City Telecom &
Computer Service
Parameswara Junction,
Thirunelveli, (89309)


## மரண அறிவித்தல்

### மார்க்கண்டு ஜெயக்குமார்
(ஹொலண்ட்)

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் ஹொலண்டை வதிவிடமாகவும் கொண்ட மார்க்கண்டு ஜெயக்குமார் அவர்கள் 10-06-2001 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் மார்க்கண்டு - பவளம் ஆகியோரின் அன்பு மகனும் சாந்தகுமார் (ஜேர்மனி), சாந்தினி (லண்டன்), சந்திரன், சிறிக்குமார்,ஜெயசீலன் (ஜேர்மனி), டசிலன், சுகந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரரும் பவளராணி (ஜேர்மனி), கனகேஸ்வரன் (லண்டன்), சாந்தகுமாரி, யசிந்தா, நளாயினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(23-06-2001) சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் ஹொலண்டில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மா. சிறிக்குமார்
(சகோதரன்)
மடத்தடி,
சண்டிலிப்பாய். (89325)

# சேவை நலன் பாராட்டுச் சிறப்பிதழ்

## நான் கண்ட அதிபர்

ஒரு கல்லூரியின் வளர்ச்சி அதன் அதிபரினதும் ஆசிரியர்களினதும் கூட்டு முயற்சியிலேயே தங்கியுள்ளது. ஓர் அதிபரிடம் இருக்கவேண்டிய ஆளுமைத் திறன் கல்லூரியைக் கட்டி வளர்க்கும். இந்த வகையில் அதிபர் திரு.க.சந்திரசேகரா அவர்கள் முதன்மை பெறுகிறார். மாணவர்களைப் பொறுத்தவரையில் ஒரு தந்தையாகவும் ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் ஒரு மூத்த சகோதரராகவும் இருந்தார். ஆசிரியர்களின் நலனைப் பேணுவதற்கும் அவர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கும் அமைந்த ஒரு அமைப்பே கல்லூரியின் சகோதரத்துவம் ஆகும். சில காலங்கள் இந்த அமைப்பின் தலைவராகவும் செயலாளராகவும் செயலாற்றும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது. அந்த வகையிலே அதிபருடன் நெருங்கிப் பழக வேண்டிய தேவைகள் ஏற்பட்ட வேளைகளில் அவருக்கும் எனக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படுவதுண்டு. அந்தவேளைகளிலெல்லாம் நான் ஓர் உதவி ஆசிரியன் என்ற வகையில் அவருடன் முரண்படாமலும் அதிபர் என்ற வகையில் அதிகார தோரணையின்றி அவரும் நடந்து பிரச்சினைகளுக்கு எளிதாகத் தீர்வுகண்டோம். இதற்கான காரணம் அவர் இதே கல்லூரியில் ஆசிரியராக, உப அதிபராக, அதிபராக படிப்படியாக உயர்வு பெற்ற அனுபவங்களே ஆகும். இவருடைய சேவைக்காலத்தில் பல அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. பாடசாலை விஸ்தரிப்பிற்காக காணிகளைப் பெற்றும் கட்டடங்களை விஸ்தரித்தும் புதிய கட்டடங்களையும் அமைத்தார்.

இவரின் இத்தியாதி சேவைகளுக்கு அவருடைய குடும்பத்தினுடைய தியாக மனப்பான்மையே காரணமாக இருந்தது என்றால் மிகையாகாது. எனவே அன்னாரும் அவர் குடும்பமும் அல்லாரை அறுகம்புலத்து ஐங்கரன் அருள்பெற்று சீரோடும் சிறப்போடும் வாழ வேண்டும் என்று உளமார வாழ்த்துகின்றேன்.

அ.விநாயகமூர்த்தி
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
*(முன்னாள் தலைவர்,*
*ஆசிரிய சகோதரத்துவம்)*

## இவரது சேவைக் காலம் கல்லூரியின் பொற்காலம்

நூற்றாண்டு விழாவை நோக்கிச் செல்லும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் வரலாற்றில் ஆசிரியராக, பகுதித் தலைவராக, உப அதிபராக இருந்து அதிபர் பதவியைப் பெற்றுக் கல்லூரியை அலங்கரித்த அதிபர் வரிசையில் சென்ற வருடம் ஓய்வு பெற்ற அதிபர் திரு.க.சந்திரசேகராவும் ஒருவராவார்.

பாடசாலை வளர்ச்சியில் பற்பல படித்தரங்களில் நின்று பணிபுரிந்த அவரிடம் கற்ற மாணவர்கள் அவரின் கற்பித்தலுக்கு உரைகல்லாக விளங்குகின்றனர். மாணவர்களும், ஆசிரியர்களும், திணைக்கள அதிகாரிகளும், சமூகமும் அவரது நிர்வாகத் திறமையை எடுத்து இயம்புவர். அவரது மொழி அறிவு, சமய அறிவு, சமூகத் தொண்டு என்பன அவரின் நிர்வாகத் திறமைக்கு எப்பொழுதும் மெருகூட்டின. கல்லூரியில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் அவர் ஆற்றிய உரைகள் என்றும் பசுமையானவை.

தென்மராட்சியில் உள்ள ஒரேயொரு தேசிய பாடசாலை என்ற பெருமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சாரும். அப்பெருமை கூட அவர் அதிபராக இருந்த காலப் பகுதியில்தான் கிடைத்தது. எமது கல்லூரி வரலாற்றில் சாதனைகளைப் பார்க்கும் போது எமது அதிபர் காலத்தில் அவ் வளர்ச்சி விரிவான, விரைவான வளர்ச்சி பெற்ற காலப்பகுதியாக விளங்குவதைக் காணலாம்.

தென்மராட்சியில் மட்டுமல்ல குடாநாட்டிலும், இலங்கையிலும், வெளிநாடுகளிலும் எமது அதிபரை அறிந்தவர்கள் பலர். பாடசாலையின் பழைய மாணவர் சங்கம், அபிவிருத்திச் சபை ஆகியவற்றுடன் இணைந்து கல்லூரி வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர். எமது கல்லூரியின் வெளிநாட்டுக் கிளைகளாகிய லண்டன், கனடாக் கிளைகள் இவரது காலத்தில் துரித செயற்பாட்டுடன் விளங்கியது குறிப்பிடத்தக்கதாகும்.

இவரது காலத்தில் பாடசாலையின் கல்வித்தரம் பௌதிக வளவிருத்தி, வெவ்வேறு துறைகளில் மாணவர்களின் அடைவு மட்டம் என்பன துரித வளர்ச்சி கண்டது யாவரும் அறிந்ததே.

இவரது சேவைக் காலத்தை முழுமையாக பாடசாலையின் பொற்காலம் எனக் குறிப்பிட்டால் அது மிகையாகாது. இவரது சமூகத் தொண்டு, பண்பு, அடக்கம், நேர்மை என்பனவற்றுக்குக் கிடைத்த மேலதிக பரிசு தான் அவர் பெற்ற "ஜே.பி." பட்டம் ஆகும்.

இவரது ஓய்வைச் சிறப்பிக்க கடந்த வருடம் ஜூன் மாதம் மணிவிழாக் கொண்டாட இருந்த காலப் பகுதியில் தென்மராட்சியில் இடம்பெற்ற அனர்த்தம் காரணமாக எம்மால் அதைக் கொண்டாட முடியாது போய்விட்டது. குறுகிய காலத்துள் எம் சொந்த மண்ணுக்குச் சென்றுவிடுவோம்; அங்கு விழா எடுப்போம் என்று காத்திருந்த ஏமாற்றம்தான் இன்றைய விழாவாக அமைகிறது. அதிபர் அவர்களும் அவரது குடும்பத்தினரும் நல்லன பெற்று நலமே வாழ அவர் துதிக்கும் அறுகம்புலம் வீரகத்தி விநாயகனை வேண்டி நிற்கிறோம்.

இ.கையிலைநாதன்
*(அதிபர்)*
*யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி*



## க.சந்திரசேகரா B.A., B.Ed., S.L.P.S.I., J.P.

| | |
|---|---|
| முழுப்பெயர்:- | கந்தையா சந்திரசேகரா |
| ஆரம்பக்கல்வி:- | பூநகரி நல்லூர் அ.த.க.பாடசாலை |
| இடைநிலைக் கல்வி:- | பூநகரி ம.வித்தியாலயம். (இவ்வித்தியாலயத்தில் பயின்று S.S.C சித்தியடைந்த முதல் மாணவன்) |
| சிரேஷ்டநிலைக் கல்வி:- | ஸ்கந்தவரோதயாக் கல்லூரி |
| பட்டப்படிப்பு:- | இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை (கிளிநொச்சி மாவட்டத்தின் முதல இலங்கைப் பல்கலைக்கழகப் பட்டதாரி) |
| பட்டப்பின்படிப்பு:- | இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை |

சேவை:-

| | |
|---|---|
| 1. நு/அல்மின் ஹாஜ் மு.ம.வி., ஹபுகஸ்தலாவ | 1966-1972 |
| 2. யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி | 1972-2000 |
| 3. துணைஅதிபர் | 1986-1990 |
| 4. அதிபர் | 1990-2000 |
| 5. கொத்தணி அதிபர் | 1990-1993 |
| 6. தென்மராட்சி அதிபர் சங்கத் தலைவர் | |
| 7. வடமாநில அதிபர் சங்கத் தலைவர் | |

## அடக்கமும் பண்பும் நிறைந்த ஆசான்

ஒரு வகையில் திரு.சந்திரசேகரா எனக்கு மாணவன். இன்னொரு வகையில் எனக்கு ஆசான். எந்தவிடயத்தையும் அதிரடியாக அணுகுவது தான் என்சுபாவம். சில சமயங்களில் சந்திரசேகராவின் முகத்தைப் பார்ப்பேன். அவர் எதுவுமே இயம்பாவிட்டாலும் கொஞ்சம் அடக்கி வாசித்தால் என்ன என்று கூறுவதுபோல் இருக்கும் அவர் முகபாவம். சில சமயங்களில் நான் பொறுமையைக் கையாள முற்பட்டதற்கு, முயன்றதற்கு அவரே பெருமளவு காரணமாக இருப்பார்.

எனக்கு உடன்பிறப்புக்கள் இல்லாத குறையைத் தீர்த்த உடன்பிறவாச் சகோதரர்களில் சந்திரசேகரமும் ஒருவர். போட்டியின்றி வளர்ந்ததால் நான் விரும்பியதெல்லாம் கிடைப்பது எனக்குப் பழக்கமாகப் போய்விட்டது. இந்நிலை இன்றுவரை நிலைத்துவிட்டது. இந்தப் போக்கை பொறுமையுடன் சகித்து எவ்வளவோ அனுசரணையுடன் என்னை ஆதரித்து நடந்ததை நான் என்றும் மறக்க முடியாது.

திரு.சந்திரசேகரா அவர்கள் ஒரு நீண்டகாலச் சிந்தனையும் தீர்க்கதரிசனமும் கொண்ட ஓர் ஆலோசகராகவும், சிறந்த துணை அதிபராகவும விளங்கியதை எமது சமகாலத்தில் நான் கண்டு பெருமைப்பட்டதுண்டு. இந்தப் பண்புகளை வெளிப்படுத்திய எண்ணற்ற சம்பவங்களில் இவையும் சில. நான் அதிபராக இருந்த காலத்தில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில சாதாரண நிலைகளில் மட்டுமன்றி அசாதாரண நிலையிலும் துணைநின்ற துணைஅதிபர் அவர்.

திரு.சந்திரசேகரா அவர்கள் எனக்குத் துணைஅதிபர் மட்டுமன்றி, சக ஆசிரியர்களின் நண்பனாகவும், உறவனனாகவும், மாணவர்களின் குருவாக மட்டுமன்றி தந்தையாகவும், நண்பனாகவும், ஆலோசகராகவும், பல பங்களிப்புகளை மேற்கொண்டதனை நான் கண்டுள்ளேன். எமது யாழ்ப்பாணச் சமூகம் தொன்மையான கலாசாரத்தையும் பண்பாடுகளையும் இறுக்கமாக அனுட்டித்துக்கொண்டிருந்தாலும் சில சில காலங்களில் இதற்கு அச்சுறுத்தல்களும் ஏற்பட்டதுண்டு. இத்தகைய சந்தர்ப்பத்தில் திரு.சந்திரசேகரா அந்த அச்சுறுத்தல்களுக்குத் துணிவுடன் முகங்கொடுத்து சம்பந்தப்பட்டவர்களை ஏற்றவகையில் அணுகி பிரச்சினைகளை இலகுவாகத் தீர்க்கக்கூடிய வகையில் செயற்பட்டுள்ளார். அச்சந்தர்ப்பங்களில் மாணவருக்குச் சிறந்த வழிகாட்டியாகவும், ஆலோசகராகவும் செயலாற்றியதைக் கண்டுகொண்டேன்.

அறிவு, அடக்கம், ஆளுமை, நிர்வாகத் திறன், அன்பு, துணிச்சல் ஆகிய அனைத்துப் பண்புகளையும் கொண்ட ஒருவர் எனக்குத் துணை அதிபராக வாய்த்தமை எனது தவப்பயனோ, அன்றி இந்துக்கல்லூரி செய்த தவப் பயனோ நான் அறியேன்.

திரு.சந்திரசேகரா ஆசிரியர் தொழிலுக்கும், இந்துக்கல்லூரிக்கும் விசுவாசமுள்ளவர். அவர் விரும்பி இருந்தால் பூநகரி மகாவித்தியாலயத்திற்கு எழுபதுகளில் சென்றிருக்கலாம். அன்று அவர் அதை ஏற்றிருந்தால் இன்று அவரது நிலை வேறாக இருந்திருக்கும். ஆயினும் தனது சுய வளர்ச்சியைக் காட்டிலும் ஆசிரியத்துவத்தில் இருந்த ஈடுபாடும் இந்துக்கல்லூரியில் அவருக்கிருந்த விசுவாசமும் அவரை அப்பதவியை ஏற்கவிடாது தடுத்தன. அப்பதவி ஏற்றவரின் வளர்ச்சியைக்கண்டு அவர் மனம் வெதும்பவில்லை. விசுவாசத்தில் நிம்மதி கண்டு மனம்மகிழ்ந்தார்.

இநதுக்கல்லூரியின் வளர்ச்சியில் திரு.சந்திரசேகரா ஒரு மைல்கல். தொடர்ந்தும் கல்லூரி முன்னேறும என்ற நம்பிக்கை எமக்குண்டு. இடைப்பட்ட காலத்து இடர்கள் விலகும்; நம்பிக்கை ஒளி பிறக்கும்.

ஓய்வு பெற்றதுடன் இந்துக்கல்லூரியுடன் உள்ள தொடர்பு அற்றுவிட்டதாக எண்ணிவிடக்கூடாது. அவரின் சேவை தொடர்ந்து தேவை. அவரின் ஓய்வுகாலம் சிறப்புற அமைய எனது நல்வாழ்த்துக்கள்.

க.சி.குகதாசன் M.Sc.
(முன்னாள் அதிபர்)
*சாவகச்சேரி இந்துக்கல்லூரி.*

## சேவையால் உயர்ந்தவர்

தென்மராட்சியில் கல்விச் செல்வத்தை வாரி வழங்கும் அரச கல்வி நிறுவனங்களில் புகழ் பூத்துக் கொடிகட்டிப் பறக்கும் முன்னணிக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரியாகும். இக்கல்லூரித் தாயை வளர்த்தெடுப்பதில அரும் பாடுபட்டுழைத்த அதிபர்கள் பலராவர். அவர்கள் வரிசையில் 1990ஆம் ஆண்டில் இருந்து 2000 ஆம் ஆண்டு வரை அதிபர் பதவியை அலங்கரித்தவர் திரு.க.சந்திரசேகரா ஆவார். 1990க்கு முன்பாக இரு வருடங்கள் உபஅதிபராகவும் கடமையாற்றியுள்ளார்.

எனது முகாமைத்துவ காலத்தில் இவருடைய ஆசிரியர் சேவை மிகவும் பாராட்டுதற்குரியது. இவர் விசுவாசமான ஆசிரியராக இலங்கியது மட்டுமன்றி சக ஆசிரியர்களதும், மாணவரதும் நன்மதிப்பை பெரிதும் பெற்றிருந்தார். க.பொ.த உயர்தர வகுப்புக்களில் பொருளியல் பாடத்தைத் திறம்படக் கற்பித்து தொடர்ந்து சாதனைகளை நிலைநாட்டி நல்லாசானாகத் திகழ்ந்துள்ளார்.

இவருடைய முகாமைத்துவத் திறமையும், சிறந்த ஆளுமையும், மதிநுகமும், மனிதநேய அணுகுமுறைகளும், பண்பாடும், குணசீலங்களும், கடமையுணர்வும், சேவை மனப்பாங்கும், தீர்க்கதரிசனமும் அவரைப் புகழேணியில் ஏற்றின. முன்னாள் அதிபர் திரு.க.சி. குகதாசன் அவர்களது சேவையைத் தொடர்ந்து, இவர் சாவகச்சேரி இந்துவின் அதிபராகவும், வடநகர்க் கொத்தணியின் அதிபராகவும் யாவரும் போற்றும் வண்ணம் செயலாற்றிய பெருந்தகையாவார். தன்னலமற்ற சேவையாலும், பாடசாலை முகாமைத்துவ ஆற்றல் அனுபவத்தினாலும இலங்கை அதிபர் சேவை தரம் Iக்கு இவர் உயர்த்தப்பட்டார். 05-02-93ஆம் ஆண்டு சாவகச்சேரி இந்துக் கல்லூரியை தென்மராட்சியில் தேசிய பாடசாலையாகத் தரமுயர்த்திய பெருமை இவரைச் சார்ந்தது. 1972 - 2000 வரை 28 வருடங்கள் ஆசிரியராகவும் அதிபராகவும் இவர் சேவையாற்றியமை நினைவில கொள்ளத்தக்கது.

க.மகேஸ்வரன்
(ஓய்வு பெற்ற அதிபர்)
*யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி*

## ஞாலம் புகழும் எமது அதிபர்

ஆழ்ந்த அறிவும், அகன்ற பெருமனமும் நுண்ணிய செயற்பாடுகளுங் கொண்டு செயற்பட்டவர் ஓய்வு பெற்றேகும் எம் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய அதிபர் உயர்திரு க.சந்திரசேகரா அவர்கள். இந்து அன்னையின் எழுச்சிக்காக ஆசிரியராக, பகுதித் தலைவராக, உப அதிபராக, அதிபராக இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக அவர் வழங்கிய அர்ப்பணிப்பான சேவைகள் என்றும் நன்றியுடன் போற்றப்படும்.

அமரர் தாமோதரம்பிள்ளை அவர்களால் உருவாக்கப்பட்டு, முன்னாள் அதிபர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட இந்து அன்னையை தேசிய பாடசாலை என்ற அந்தஸ்துக்காளாக்கி சீரிய நெறியில் வழிப்படுத்திய பெருமை எமது அதிபரையே சாரும். அதிபரின் திட்டமிட்டு செயற்படுத்தும் திறனும், ஆளுமையும், அர்ப்பணிப்பான செயற்பாடுமே கல்லூரியை பல நிலைகளிலும் உயர் நிலைக்குக் கொண்டுவந்ததெனலாம்.

ஒரு மாணவனின் கல்வி சில புறக்காரணங்களால் பாதிப்படையக் கூடாது என்ற சிந்தனையின்பால் பல புலமைப்பரிசில் திட்டங்களையும், 'அதிபர் நிதியம்' என்ற நிதியம ஒன்றினையும் உருவாக்கி பாடசாலைக் கல்வியிலும் பல்கலைக்கழகக் கல்வியிலும் பல மாணவர் பயன்பெற திட்டங்களை உருவாக்கி செயற்படுத்தி வைத்தவர்.

எம் இதயம் நிறைந்த அதிபர் ஓய்வு காலத்தில் உவப்பொடு நல்லன பல பெற்று குடும்பத்தினரோடு நலமே சிறப்பொடு வாழ இறையருளை இறைஞ்சி அமைகின்றேன்.

க.பத்மகாந்தன்
உப அதிபர்
*யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி*

## மனிதாபிமானம் மிக்கவர்

கடந்த கால்நூற்றாண்டு காலமாக எமது கல்லூரியில் ஆசிரியராக, பகுதித் தலைவராக, உப அதிபராக, அதிபராக ஆழக் கால் பதித்த பெருமகனாவார். இவர் அதிபராக இருந்த காலத்தில் கல்வி அடைவிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மாபெரும் சாதனைகள் படைத்த பொற்காலமாகும். தனது அன்பு, கருணை, கடமை, விடாமுயற்சி போன்றவற்றினால் மாணவர், ஆசிரியர் உறவில் விரிசல் ஏதும் ஏற்பட து நல்வழி காட்டிய பெருமைக்குரியவர்.

தவறுவிட்ட மாணவனையும் திருத்தி கல்வியில் உயர்வு பெற வழிகாட்டிய மனிதாபிமானம் மிக்க அதிபராகத் திகழ்ந்தவர். தன் குடும்பத்தை, தன் சொந்தப் பிள்ளைகளை விட பாடசாலைச் சமூகத்தையும் மாணவர்களையும் பெரிதும் நேசித்த பெருமைக்குரியவர். அவர் ஓய்வுபெறும் கடைசி நிமிடம்வரை கல்லூரியின் வளர்ச்சிக்காக ஆற்றிய சேவைக்கு என்றும் எமது சமூகம் நன்றி அறிதல் உடையதாகவே திகழும். அவர் ஓய்வுகாலம் சிறப்பாக அமைய ஆசிரிய சகோதரத்துவ உறுப்பினர் அனைவர் சார்பாகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

க.சுந்தரலிங்கம்,
(தலைவர்)
*ஆசிரிய சகோதரத்துவம்.*

சாவகச்சேரி
இந்துக்கல்லூரி.

(89335)

# ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு; இதுவே தமிழரின் விருப்பம்

## பிரிட்டிஷ் தூதரிடம் டக்ளஸ் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன்23

கடந்த பொதுத் தேர்தலில் வடக்கு - கிழக்கில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்கள் அளித்துள்ள வாக்குகளின் எண்ணிக்கையின் படி, தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் ஜனநாயக வழியிலான ஒரு தீர்வினையே தெரிவு செய்துள்ளார்கள்.

இவ்வாறு வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் லின்டா டபீல்ட் அம்மையாரிடம் தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் தூதுவர் லின்டா டபீல்ட் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்டத் தலைமைச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் அமைசசர் டக்ளஸ் தேவானந்தாவை சந்திததுப் பேச்சு நடத்தினார்.

அரசு மேற்கொள்ளும் புலிகளுடனான பேச்சு முயற்சிகளை வரவேற்கின்றோம்.

இப் பேச்சு முயற்சிகள் கள்வர்களுக்கு இடையில் நடைபெறும் இரகசியப் பேச்சுக்களாக அமையாமல் பகிரங்கப் பேச்சு முயற்சிகளாக அமைய வேண்டும்.

ஈ.பி.டி.பி. தமிழ் பேசும் மக்களின் அரசியற் பிரச்சினைக்கு ஜனநாயக வழிமுறைக்குள் - நடைமுறைச் சாத்தியமான. வழியில் - ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் தீர்வாக, மத்தியில் கூட்டாட்சியையும் வடக்கு-கிழக்கு மாநிலத்தில் சுயாட்சியினையும் வலியுறுத்தி வருகிறது. இத தீர்வு உருப்பெறுவதற்கான அரசியல் முயற்சிகளை முன்னெடுக்கும் அதே வேளை, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட, மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டு வருகிறது. எனக்கு கிடைத்த அமைச்சு மூலம் வடபகுதியில் தீவிரமான புனர்வாழ்வு புனரமைப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றேன். நேற்று முதல் இரவு நேர ஊரடங்கு அமுல்படுததப்படும் நேரத்தில் ஒரு மணி நேரத் தளர்வு ஏற்படுத்தியுள்ளோம். இதனையடுத்து, இனி இரவு 10 மணி முதல் ஊரடங்கு அமுல் செய்யப்படவுள்ளது. ஆனால் இத்தகைய நடவடிக்கைகள் மூலம் மக்கள் அமைதி நிலைக்கு திரும்புவதை விரும்பாத அரசியல்வாதிகள், எமது செயற்பாடுகள் பற்றி தவறான கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்பி வருகின்றார்கள் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரிட்டிஜ் தூதுவரிடம் தெரிவித்தார் என்று ஈ.பி.டி.பி வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## புதிய சம்பளத் திட்டம் அமுலுக்கு

அரியாலை,ஜூன்23

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பணியாளர்களுக்கான மீளாய்வு செய்யப்பட்ட புதிய சம்பளக கொடுப்பனவை வழங்கிவருகின்றது.

புதிய சம்பளக் கொடுப்பனவு கடந்த மே மாதம் தொடக்கம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டிருப்பதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-17)

## கும்பாபிஷேகம்

நல்லூர் ஆடியபாத வீதி ஸ்ரீ பால பரமேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தில் வைரவப் பெருமானுக்கு ஆவர்த்தன ஏககுண்டபட்ச பிரதிஷ்டா கும்பாபிஷேகம் எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இதற்கான பூர்வாங்கக் கிரியைகள் 25 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும். 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணி முதல் நண்பகல் வரை அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்துவர். (ஐ)

## பட்டப்பின் கல்வி டிப்ளோமா பரீட்சை

வலி.தென்மேற்கு,ஜூன்23

யாழ் - திறந்த பல்கலைக்கழக பட்டப்பின் கல்வி டிப்ளோமா பரீட்சை எதிர்வரும் 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பமாகும் என பிராந்திய இயக்குநர் ச.ஆ.ஞானேந்திரன் தெரிவித்துள்ளார்.

பரீட்சை அனுமதியட்டைகள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகளும் தமது பதிவுப் புத்தகத்துடன் பரீட்சைக்குத் தோற்றலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - கடந்த வருடம் பரீட்சைக்கு தயாராய் இருந்த 1 ஆம் ஆண்டு பட்டப்பின் கல்வி டிப்ளோமா மாணவர்களுக்கு வினாத்தாள் அனுப்பப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-185)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 1948 - 01 - 24



விண்ணில் 1999 - 07 - 15

### அமரர் தங்கவேல் சத்தியதேவன்

*(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உதவியாளர்)*

திதி: பூர்வபக்க திருதியை (23.06.2001)

எங்கள் குலவிளக்கே! எங்கே நீ மறைந்தாயோ?
பொங்கும் அன்புவெள்ளம் வற்றிப் போயிற்றோ?
ஆண்டு இரண்டல்ல ஆயிரந்தான் சென்றாலும்
எம்துயரம் தீராது எழுந்தோடி வாராயோ?

*193, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.*

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள்.

(89259)

## நீங்காத நினைவலைகள்

முதலாம் ஆண்டு — ஏழாம் ஆண்டு





| திருமதி கணேசையா ஆசைப்பிள்ளை | | அமரர் ஆறுமுகம் கணேசையா |
|---|---|---|
| 06.05.1923 | தோற்றம் | 19.05.1922 |
| 04.06.2000 | மறைவு | 15.08.1994 |

திதி:23-06-2001

அன்புக்கும் பண்புக்கும் உறைவிடமாய் இருந்து எங்களை நல்வழிப்படுத்திய எமது அன்புத் தெய்வங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*169/8, முதலாம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.*

*பாசமுடன் நினைவு கூரும்:*
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(89241)

## முதலாம் வருட நினைவஞ்சலி

பூமாதேவி மடியில் 25 - 06 - 1938



உமாதேவி அடியில் 04 - 07 - 2000

### திருமதி செல்லம்மா வினாசித்தம்பி

(ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர் - பளை, S.L.P.S. 2:1)

திதி : 23-06-2001

பல சுமைகள் சுமந்து நீங்களெமை
பல கலையும் பயில வைத்துப் பாரோர் போற்ற
பல பதவிகளில் மிளிர வைத்த அம்மாவே!
இன்பச் சுமை தூக்குமுன் உங்கள் இதயம்
வெந்ததேனோ?
துன்பத்தைச் சுமக்க மாட்டோம் எம் குல விளக்கே!
கலைச் செல்வியே!
சிவபதமடைந்துமே எமக்குச் சிறந்த செல்வம்
தரும் அம்மாவே!
சிந்துகின்றோம் எம் கண்ணீர் வற்றாது என்றுமே,
சிவன் சேவடிக் கீழ் சீரோடு வாழ்வீர் அம்மா!
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

தகவல்:
*Dr. செல்வி பவானி வினாசித்தம்பி, போதனாவைத்தியசாலை, யாழ்ப்பாணம்.*

நிரந்தர முகவரி: *'தாயகம்', பளை.*

*உங்கள் பிரிவால் துயருறும்:*
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உடன் பிறந்தோர், உறவினர்,
அன்பர்கள்.

(89171)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 24 - 05 - 1948



ஆண்டவன் அடியில் 03 - 07 - 2000

### அமரர் செல்லத்துரை ஜெகதீஸ்வரன்

(மக்கள் வங்கி எழுதுவினைஞர்)

எங்கள் குடும்பத்தின் தெய்வமாக
அன்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
அன்பூட்டி அறிவூட்டி ஆதரவாய்
எம் சொத்தாக இருந்த தந்தையே!
காலமெல்லாம் எம்முடன் வாழ்வீர்
என எண்ணியிருக்க
காலன் கவர்ந்து சென்றதேனோ?
பேரோடும் புகழோடும் பெருமையாய்
வாழ்ந்த உங்கள் நினைவுருவம்
வருடம் ஒன்று சென்றாலும்
எம் நினைவுகளை விட்டு மறையாது.

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*ஏழாலை மேற்கு, ஏழாலை.*

பிரிவால் துயருறும்:
*அன்பு மனைவி* - சத்தியராணி
*அன்பு மகன்* - வாகீசன்
மற்றும் உற்றார், உறவினர்கள்.

(89255)

## நீங்காத நினைவஞ்சலி

முதலாம் ஆண்டு — நினைவு கூருகிறோம்





**ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை**
(கச்சதீவு மூப்பர்)

மண்ணில் - விண்ணில்
10-03-1910 23-06-2000

**திருமதி அன்னம்மா அந்தோனிப்பிள்ளை**

இறப்பு
21-08-1964

மரித்தோருக்காகப் பிரார்த்திப்பது
பரிசுத்தமும் பிரயோசனமுமான யோசனை!
(2ஆம் மக்கபேயர் - 12-46)

*"அன்ரன் வாசா" நெடுந்தீவு-14.*

(89184)

- குடும்பத்தினர்.

# புலிகள் மீதான தடையை நீக்க ஐக்கிய தேசியக் கட்சி இணக்கம்

## ரெலோ எம்.பி. அடைக்கலநாதன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்23

புலிகள் மீதான தடையை நீக்கவும், திம்புக் கோட்பாட்டின் அடிப்படையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணவும் ஐக்கிய தேசியக்கட்சி தலைவர் ஒப்புக்கொண்டதனாலேயே நாம் அக்கட்சிக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளோம்.

- இவ்வாறு தெரிவித்தார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழீழ விடுதலை இயக்கத் (ரெலோ) தலைவருமான செல்வம் அடைக்கலநாதன்.

நேற்றுமுன்தினம் பி.பி.ஸி தமிழோசைக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த அரசு தமிழினத்தை அழிப்பதற்காக போர் யுத்திகளை மாற்றிக் கொண்டிருக்கிறதேயன்றி இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது பற்றி எள்ளளவும் சிந்திப்பதாகத தெரியவில்லை.

அரசு தீர்வுத் திட்டம் என்ற ஒன்றைச் சொல்லி தமிழரை ஏமாற்ற முனைகிறது. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியோ போர் நிறுத்தத்திற்கும்,வன்னிக்கான உணவுத்தடையை நீக்கவும் எம்மிடம் உறுதியளித்துள்ளது. இதன் காரணமாகவே நாம் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க முடிவு செய்துள்ளோம்- என்றார்.

(ம-9)



யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களுக்கு வட பிரதேச இந்துப் பேரவையினரின் ஏற்பாட்டில் கடந்த வியாழக்கிழமை ஒரு தொகுதி பொருள்கள் அன்பளிப்பாக வழங்கப் பட்டன.

இந்திய மீனவர்களுக்கு வழங்குவதற்கான பொருள்களுடன் யாழ்.வர்த்தகப் பிரதிநிதிகள் காணப்படுவதையும் அவற்றை வட பிரதேச இந்து பேரவை தலைவர் சிவஸ்ரீ திருஞானசம்பந்த குருக்கள் மற்றும் வர்த்தக பிரதிநிதிகள் சிறைச்சாலை அதிகாரியிடம் ஒப்படைப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- றோய் மதிவதனன்)

# மக்களின் வழக்கு விசாரணைகளை தமிழ்க்குழுக்கள் நடத்தக்கூடாது!

## வவுனியா நீதிவான் கடும் விசனம்

வவுனியா,ஜூன்23

நீதிமன்றங்கள் சம்பந்தப்பட்ட வழக்கு விசாரணைகளை வவுனியாவில் உள்ள தமிழ்க் குழுக்கள் தங்கள் அலுவலகங்களில் நடத்துவது குறித்து வவுனியா மாவட்ட நீதிவான் எம்.இளஞ்செழியன் கடும் விசனம் தெரிவித்துள்ளார். தமது முகாம்களில் பொதுமக்களை விசாரிப்பதை நிறுத்திக் கொள்ளுமாறு அவர் தமிழ்க் குழுக்களுக்கு கண்டிப்பான உத்தரவையும் விடுத்துள்ளார்.

வவுனியா நீதிமன்றில் கடந்த புதனன்று இடம்பெற்ற சிவில் வழக்கு விசாரணை ஒன்றின் போதே நீதிவான் இந்த உத்தரவை விடுத்தார்.

வவுனியாவில் மேல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் ஆகியன இயங்குகின்றன. அதேவேளையில் தமிழ்க குழுக்களின் இத்தகைய செயற்பாடுகள் நீதிமன்றங்களை அவமதிக்கும் செயலாகும் என்று நீதிவான் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இயங்கும் தமிழ் குழுக்கள் விவாகம், விவாகரத்து, காணி விவகாரங்கள் ஆகியன தொடர்பான பொதுமக்களின் பிரச்சினைகளை விசாரித்து வருவதாக நீதிவானின் கவனத்துக்குக் கொண்டுவரப் பட்டிருந்தது.

(ஐ-3)

## ஏனைய கட்சிகளுடன் இணைந்து

# ஜனநாயகத்தை உருவாக்க பொது வேலைத் திட்டம்

## ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு

கொழும்பு,ஜூன்23

ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்காக சகல எதிர்க்கட்சிகளுடனும் இணைந்து மேற்கொள்ளவுள்ள வேலைத் திட்டம், அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிப்புடன் ஆரம்பமாகும்.

இப்படி எதிர்க்கட்சித் தலைவரும், ஐ.தே.கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கதெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற ஐதேக நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு சொன்னார்.

ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்கான பொது வேலைத் திட்டம் குறித்து சகல எதிர்க்கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருக்கிறது.

மக்கள் விடுதலை முன்னணியின யோசனைக்கு அமைய சுயாதீன ஊடக ஆணைக்குழு, தேர்தல் காலததுக்கான காபந்து அரசாங்கம் பற்றிய விடயங்களும் இந்த பொது வேலைத் திட்டத்தில் உள்ளடக்கப் பட்டிருக்கிறது என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

(ஐ)

# வலி.தென்மேற்கு ஆலயங்களில் மிருகபலிக்கு தடை விதிப்பு

## பிரதேச சபைத் தலைவர் நடவடிக்கை

வலி.தென்மேற்கு,ஜூன்23

வலி.தென்மேற்கு - பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் வேள்வியின் பெயரால் மிருகங்கள் பலியிடப்படுவதற்குப் பிரதேச சபைத் தலைவர் வெ.அஜோன்சன் தடைவிதித்துள்ளார்.

வலி.தென்மேற்கில் பிரான்பற்று வைரவர் ஆலயம், நவாலி தம்பினை மாரியம்மன் ஆலயம், ஆனைக்கோட்டை காத்தவராயர் ஆலயம் ஆகியவற்றில் ஆண்டு தோறும் வேள்விகள் நடைபெறுகின்றன. இந்த ஆலயங்களிலேயே வேள்விக்காக மிருகங்கள் பலியிடுவதற்குத் தடை விதிக்கப் பட்டுள்ளது.

மேற்படி ஆலய வேள்விகளில் முறையான பூசைகள் நடைபெறுவது இல்லையென்றும், கடவுள் விக்கிரகங்கள் முறைப்படி பேணப்படவில்லையென்றும் பொதுமக்களினால் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே மிருகபலி தற்காலிகமாக தடைசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-185)

## கப்புதூ அந்தணன் திடல் கிராமத்துக்கு

# குடி தண்ணீர் வசதி வழங்குவதில் பிரிட்டிஷ் மக்கள் மகிழ்கின்றனர்

## தூதுவர் லிண்டா டபீல்ட் அம்மையார் தெரிவிப்பு

வடமராட்சி,ஜூன்23

மனிதனுக்குத் தேவையான அடிப்படை வசதிகளில் தண்ணீர் முக்கியமானது. மிகவும் கஷ்டப்பட்ட வசதி குறைந்த இக்கிராம மக்களுக்குக் குடிதண்ணீர் வசதியை வழங்குவதில் பிரிட்டிஷ் மக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

இவ்வாறு கப்புதூ அந்தணன் திடல் கிராமத்தில் குடிதண்ணீர் விநியோகத்தை ஆரம்பித்து வைத்த பின்னர் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில் பேசுகையில் பிரிட்டிஷ் தூதர் லிண்டா டபீல்ட் அம்மையார் கூறினார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை நண்பகல் வேளையில் பிரிட்டிஷ் தூதர் கப்புதூ அந்தணன் திடல் கிராமத்துக்கான குடிதண்ணீர் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இத்திட்டத்துக்கான தண்ணீரை வழங்கும் கரணவாய் அந்திரானில் உள்ள எஸ்.தாமோதரம்பிள்ளை என்பவரது வளவில் உள்ள கிணற்றிலிருந்து குடிதண்ணீர் பெறுவதற்கான இயந்திரத்தை முதலில் இயக்கி வைத்த பிரிட்டிஷ் தூதுவர் பின்னர் அந்தணன் திடலிலும் கப்புதூவிலும் குடிதண்ணீர் விநியோகத்தை ஆரம்பித்து வைத்தார்.

கப்புதூவில் குடிதண்ணீர் விநியோகத்தை ஆரம்பித்ததைத் தொடர்ந்து பிரிட்டிஷ் தூதுவருக்கு கிராமமக்களால் மாலை அணிவிக்கப்பட்டது. பின்னர் அவர் அங்கிருந்து அழைத்துச் செல்லப்பட்டு கப்புதூ ஏகாம்பரம வித்தியாலயத்தில் பொது வரவேற்பு அளிக்கப்பட்டது.

கப்புதூ அந்தணன் திடல் தண்ணீர் பாவனையாளர்சங்கத் தலைவர் எஸ்.ரவி தலைமையில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில் ஒரு சில நிமிடங்கள் பிரிட்டிஷ் தூதுவர் லிண்டா அம்மையார் பேசினார்.

தனது உரையில் அவர் மேலும் கூறியதாவது:-

இக்கிராம மக்களுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்கான திட்டத்தைச் செயற்படுத்த பிரிட்டிஷ் அரசு 8 லட்சம் ரூபாவை வழங்கியது. அந்த நிதியை வைத்துக்கொண்டு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் இத்திட்டத்தைச் சிறப்பாகச் செய்து முடித்துள்ளது.

திட்டத்தை சிறப்பாக நிறைவேற்றிய ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்துக்கும், கிராமத்துக்குத் தேவையான குடிதண்ணீரை பதினொரு கிலோமீற்றர் தொலைவில் உள்ள தனது கிணற்றின் மூலம் தந்துதவும் தாமோதரம்பிள்ளைக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

கரவெட்டி பிரதேச செயலாளர் செ.ஸ்ரீநிவாசனும் உரையாற்றினார்.

(ம-173)

இலங்கை வங்கி

யாழ்ப்பாணம்

ரண்சுரெக்கும் கடன்சேவை (தங்கநகை கடன் சேவை)

அவசரத் தேவைகளின்போது உதவ, சிநேகபூர்வமான சேவை தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

- தேவைகளை இனங்கண்டு துரிதசேவை!
- கொடுக்கல் வாங்கல் தொடர்பில் இரகசியம் பேணல்!
- உங்கள் தங்க நகைகளுக்குக் கூடுதல் பாதுகாப்பு!
- 22 கரட் தரமுடைய தங்கநகையின் பவுண் ஒன்றுக்கு ரூ 4000/= வரை கடன் பெறும் வசதி!
- இவ்விடயத்திற்கென ஒதுக்கப்பட்ட விஷேட அறையினுள் கொடுக்கல் வாங்கல்கள்!
- இலங்கையில் காணப்படும் ஆகக் குறைந்த வட்டி வீதத்தில் கடன்களைப் பெறுவதற்கு எங்களது வாடிக்கையாளர்களுக்கு வாய்ப்பு!

வெளிநாட்டு நாணயங்களை இலங்கை ரூபாவில் மாற்றும் சேவையும் நடைபெறுகின்றது.



மேலதிக விவரங்களுக்கு

பிரதான முகாமையாளரைச் சந்தியுங்கள்

இலங்கை வங்கி,

மேற்றரக்கிளை,

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சீ17174)

# கீரிமலையில் பிதிர்க்கடன் செய்வதற்கு அனுமதியுங்கள்

## வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் கோரிக்கை

கீரிமலை தீர்த்தக் கேணியில் இந்து சமயத்தவர்கள் தமது பிதிர்க் கடன்களைச் செய்வதற்கு இராணுவம் அனுமதிக்கவேண்டும்.

வலி.வடக்குப் பிரதேச சபைத் தலைவர் திருமதி பாலாம்பிகை ஸ்ரீ பாஸ்கரன் 515ஆவது படையணி பொறுப்பதிகாரியிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள இந்து மக்கள் கடந்த காலங்களில் தமது பிதிர்க்கடன்களை கீரிமலை கேணிக் கடற்பகுதியில் மேற்கொண்டு வந்துள்ளனர். ஆனால் கடந்த பல வருடங்களாக இந்தப் பகுதி அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இருப்பதால் அங்கு செல்லப் படையினர் தடை விதித்துள்ளனர். இதனால் குடாநாட்டின் வேறு இடங்களிலுள்ள கேணிகள் மற்றும் சில கடற்கரைப் பகுதிகளில் இந்துக்கள் தமது பிதிர்க்கடன்களை நிறைவேற்றி வருகின்றார்கள். இவற்றில் பிதிர்க்கடன்களைச் செய்வதற்கான முழுமையான வசதிகள் இல்லை.

எனவே புனித தீர்த்தமான கீரிமலைக் கேணியில் பிதிர்க்கடன்களை மேற்கொள்ள அனுமதிக்கவேண்டும் எனவும் அவர் தமது கோரிக்கையில் தெரிவித்துள்ளார்.

(ம-86)

# வாழ்த்தி வணங்குகின்றோம்



## கிரியாகலாப முக்தாமணி

## சிவஸ்ரீ ச.மகேஸ்வரக்குருக்கள்

புகழ் பொதிந்த சுதுமலையின் அம்மன் கோவிற் பிரதம குருவாய்,
நயினைத் தாயின் அகந் தனிலே ஆதீனக் குருவானீர்!
சர்வதேச இந்துமத குருபீடத்தின்
புகழ் பூத்த அதிபதியாய் உயர்ந்தீர் .....வாழ்க!
"கிரியா கலாப முக்தாமணி" சீர் வெல்க!
அக இருளைக் களைந்து இந்து மக்கள் ..... இந்த
அகிலமெல்லாம் நிமிர..... வழி காட்டி ஆள்க!

**வாழ்த்துவோர்:-**
*சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம்*
*பூங்காவன திருவிழா உபயகாரர்.*

*சுதுமலை,*
*மானிப்பாய்.*
(89302)

# ஆஸ்பத்திரி அபிவிருத்திக்கு பலர் நிதிஉதவி

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திக்கு பலரும் நிதி உதவிகளை வழங்கி வருகின்றனர்.

கனடாவில் வசிக்கும் எஸ்.சிவலிங்கம் என்பவர் 25 ஆயிரம் ரூபாவையும், கெருடாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் எஸ். சுரேந்திரநாதன் 5 ஆயிரம் ரூபாவையும், எம்.எஸ்.எப்.மருத்துவக்குழு மயக்க மருந்து நிபுணர் திருமதி குட்ரூன் ஆயிரம் ரூபாவையும் வைத்தியசாலை அபிவிருத்திச் சபைக்கு வழங்கியுள்ளனர். வைத்தியசாலை வளவுக்குள் குப்பைத் தொட்டிகள் அமைக்க உடுபபிட்டி வர்த்தகர் சங்கத் தலைவர் 10 ஆயிரம் ரூபாவையும் ஆஸ்பத்திரி முன்பகுதியில் சிமெந்து இருக்கைகளை நிர்மாணிக்க பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் 8ஆயிரம் ரூபா பெறுமதியான சிமெந்தினையும் வழங்கியுள்ளதாக வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர்.மயிலேறும் பெருமாள் தெரிவித்தார். (ம-173)

சுன்னாகம்

புனித அந்தோனியார் ஆலயத் திருப்பணிக்காக

# நாடக விழா

ஆலய முன்றலில் நாளை (24.06.2001) ஞாயிற்றுக்கிழமை
மாலை 6.30 மணிக்கு நாடக விழா ஆரம்பமாகும்.

**கலைவேந்தன் M.தைரியநாதன்**
- அரியாலையூர் செல்வம்

இணைந்து வழங்கும்
☆ **அரிச்சந்திர மயான காண்டம்**
☆ **பூதத்தம்பி**

ஆகிய சரித்திர நாடகங்களும்
வேத நாயகத்தின்
**ஒளி**
எனும் சமூக நாடகமும்
*ஆனந்த் இசைக்குழுவினரின்*
**இசை நிகழ்ச்சியும் இடம்பெறும்.**

ரிக்கெற்றுகள்: ஆலய முன் வாயிலில்.

புனித சூசையப்பர்
தந்தையர் மன்றத்தினர்.
*சுன்னாகம்.*

குறிப்பு:- *கலைவேந்தன் M.தைரியநாதன் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்படுவார்*
(C/17176)

உ
தில்லையம்பதியாள் துணை

# திருமண அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான விஷ வருடம் ஆனி மாதம் 9ஆம் நாள் இன்று (23-06-2001)
சனிக்கிழமை பகல் 11.30 மணி முதல் 2.00 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில்
கனடா 717, கெனடி வீதியில் அமைந்துள்ள மண்டபத்தில்

*திரு. திருமதி பொன்னம்பலம்*
*தம்பதிகளின் புத்திரன்*
*திருநிறை செல்வன்*
**குகன்**
*அவர்களுக்கும்*



*திரு. திருமதி குணரட்ணம்*
*தம்பதிகளின் புத்திரி*
*திருநிறை செல்வி*
**ஜேன் ராஜி**
*அவர்களுக்கும்*

தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் துணை கொண்டு திருமணம் செய்து வைக்கப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டுத் திருமாங்கல்யதாரணம் நடைபெறுகின்றது என்பதை எமது உற்றார், உறவினர், நண்பர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். இன்று (23-06-2001) சனிக்கிழமை கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயிலில் இந்தத் திருமண வைபவத்தை முன்னிட்டு நடைபெறுகின்ற விருந்துபசாரத்தில் தாங்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மனமார மணமக்களை வாழ்த்தி எம்மை மகிழ்வித்துச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

**திரு.திருமதி பொன்னம்பலம் பவளம்மா**
**திரு. திருமதி குகேந்திரன் - சுகிதா**
**திரு. குகதாசன் (லண்டன்)**
**தில்லையம்பதி, கோண்டாவில்**

**திரு.திருமதி குணரட்ணம்,**
**கீரிமலை வீதி,**
**பண்டத்தரிப்பு.**

(89223) (இருவீட்டார் அழைப்பு)

# துயர் பகிர்கின்றோம்

எமது சக அங்கத்தவர்களான
**நித்தி, வசந்தன், சிவா**
ஆகியோரது அன்புத் தந்தையார்

## P.R. தம்பிநாயகம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இளைஞர் உருவாக்கல் இயக்கம்,
யாழ்.மரியன்னை பேராலயம்.
*யாழ்ப்பாணம்.*
(89307)

# துயர் பகிர்கின்றோம்

எமது சக உத்தியோகத்தர்
**திரு.ச.வேல்மாறன்**
(களஞ்சியப் பொறுப்பாளர், அரச உணவுக் களஞ்சியம்,
காங்கேசன்துறை)
**அவர்களின் அன்புத் தந்தையார்**

## அமரர் பொன் சபாபதி

(ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி)

அவர்களின் மறைவையிட்டு துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

உத்தியோகத்தர்கள்,
உணவுக் கட்டுப்பாட்டுக் கிளை,
வறுமை நிவாரணக் கிளை.
*மாவட்டச் செயலகம்,*
*யாழ்ப்பாணம்.*
(89306)

# மரண அறிவித்தல்

## திருமதி வரலட்சுமி வன்னியநாதன்

கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் மூளாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வரலட்சுமி வன்னியநாதன் மூளாயில் அன்னாரது இல்லத்தில் 20.06.2001 புதன்கிழமை காலை 10.00மணியளவில் காலமானார்.

அன்னார் கருகம்பனையைச் சேர்ந்த மார்க்கண்டேயர் என அழைக்கப்படும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பரமேஸ்வரி ஆகியோரின அன்பு மகளும், மூளாயைச் சேர்ந்த திரு.திருமதி தாமோதரம்பிள்ளையின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பிரசித்தநொத்தாரிசும் சட்டத்தரணியுமாகிய வன்னியநாதனின் அன்பு மனைவியும், உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்த காலஞ்சென்ற அருளம்பலக்குமாரசூரியரின் மனைவி வன்னியசுந்தரியின் சித்தியும் ஞானானந்தன் (கொழும்பு), கேதாரகௌரி (கொழும்பு), ஞானசம்பந்தன் (இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர், பெருந்தெருக்கள் திணைக்களம்), ஞானசௌந்தரி, ஞானசூரியர் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற அருளம்பலக்குமாரசூரியர் (அத்தியட்சகர் பெருந்தெருக்கள் திணைக்களம்), சந்திரமணிதேவி (கொழும்பு), கதிர்காமக்குமாரசூரியர் (இளைப்பாறிய முகாமையாளர், மக்கள் வங்கி-கொழும்பு), பவானி, செந்தில்நாதன் (அதிபர், யாழ்.தொழில் நுட்பக்கல்லூரி) ஆகியோரின் மாமியாரும் இரத்தினகுமாரசூரியர் (கனடா), இராசகுமாரசூரியர் (லண்டன்), பாலகுமாரசூரியர் (கனடா), சூரியகுமாரி (திருமதி டாக்டர் S.ஆனந்தராசா - கொழும்பு), சூரியகலா (திருமதி முருகானந்தம் பொறியியலாளர் - கனடா), விஜயராகவன் (லண்டன்), அகிலினி (திருமதி டாக்டர் மனோகரன் - நோர்வே), சாஜினி (கொழும்பு), கணேசகுமாரசூரியர் (Group Systems Administrator, Danzas, கொழும்பு), சங்கர் குமாரசூரியர் (Data base & Systems Administrator, Lanka Bell, கொழும்பு), ஐங்கரன் (மாணவன், யாழ்ப்பாணக்கல்லூரி), கஜநேசன் (லண்டன்), மயூரேசன், யதுர்சன் (மாணவர்கள், யாழ்ப்பாணக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.06.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணிக்கு மூளாயிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மூளாய் பித்தனை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*"ஞானவாசம்",*
*உடையார் வளவு,*
*மூளாய், சுழிபுரம்.*
(89291)

தகவல்:
ஞானசம்பந்தன் (மகன்),
மக்கள், மருமக்கள்.



உ

கோப்பாய் மத்தி - நாவலடி

## திருவருள்மிகு ஸ்ரீ மகாமுத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

# மஹா கும்பாபிஷேகப் பெருவிழா

ஆனி 8ஆம் நாள் 22-06-2001 வெள்ளிக்கிழமை

காலை 8.00மணிமுதல் கங்காபூஜை, சூர்யாக்கினி, சங்கிரகணம்.

மாலை 3.00மணி முதல் மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், ரஷாபந்தனம், பிரசன்னா அபிஷேகம், பிரசன்னாபூஜை, கடஸ்தாபனம், கலாகர்ஷனம், க்ஷணஹோமம், கும்பயாகசாலாபிரவேசம், நவாக்கினி விபசனம், யாகபூஜை, பூர்ணாகுதி, பிரதஷணம், தீபாராதனை, தூபிஸ்தாபனம், தீபஸ்தாபனம், யந்திரஸ்தாபனம், விம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம்.

ஆனி 9ஆம் நாள் இன்று (23-06-2001) சனிக்கிழமை

காலை 4.00மணிமுதல் மாலை 4.30மணிவரை தைலாப்யங்கம் (எண்ணெய்க் காப்புச் சாத்துதல்) புண்ணியாக வாசனம், விஷேடசந்தி, யாகபூஜை, ஹோமம், பூர்ணாகுதிகள், பிரதஷணம், வேதபாராயணம், விபூதி பிரசாதம் வழங்கல்.

மாலை 3.00 மணிமுதல் விசேட சந்தி, யாகபூஜை, விம்பசுத்தி, மூர்த்திகள் ரக்ஷிபந்தனம், பூர்வ சந்தானம், பூர்ணாகுதி, வேதபாராயணம், சிவாச்சாரியபூஷணம், விபூதிப்பிரசாதம் வழங்கல்.

ஆனி 10ஆம் நாள் நாளை (24-06-2001) ஞாயிற்றுக்கிழமை

காலை:-6.00 மணிக்கு புண்ணியாக வாசனம், யாகபூஜை, மகாபூர்ணாகுதி, யாத்திராதானம், கும்பவீதிப் பிரதஷணம்.

காலை:-9.35 - 9.55க்குள் திருதியைத் திதியும் பூச நஷத்திரமும் சிங்கலக்கினமும் சித்த யோகமும் கூடிய சுபவேளையில் அம்பிகைக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து தசதர்சனம், ஆச்சாரிய சம்பாவனைகள், ஆசியுரைகள், விபூதி திருவருட்பிரசாதம் வழங்கல்.

காலை:- 10.00 மணிக்கு மகா அபிஷேகம் நடைபெறும்.

மாலை:- 5.00 மணிக்கு விஷேட வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து அம்பாள் பூந்தண்டிகையில் விசேட மங்கள வாத்தியங்களுடன் வீதியுலா வரும் காட்சி இடம்பெறும்.

பிரதிஷ்டா பிரதம குரு:-
*சிவாகம ஞான பாஸ்கரன்* **சிவஸ்ரீ குமாரகமலபூஷணக் குருக்கள்**

தலைவர்:- செல்வன் சு.தயானந்தேஸ்வரன் (கல்வியங்காடு)
உபதலைவர்:- திரு.த.ஜெயராசா
செயலாளர்:- திரு.வே.பத்மராசன்
உபசெயலாளர்:-திரு.மூ.கனகசிங்கம்
பொருளாளர்:- திரு.து.தனபாலசிங்கம் - *(அகில இலங்கை சமாதான நீதிவான்)*

தர்மபரிபாலன சபை
**அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள்**
**தேவஸ்தானம், கோப்பாய்.**

(89248)

## நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம்,ஜூன்23

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் நிறுவுனர் நினைவு தினமும், பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அதிபர் பொ. சுந்தரலிங்கம் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு - கிழக்கு மாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அமைப்பின் செயலாளர் சொ.அமிர்தலிங்கமும், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழைக் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.வ.கணேசலிங்கமும், கௌரவ விருந்தினராக கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் கலந்து கொள்ளவுள்ளனர். நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ் சிவலிங்கராசா நிகழ்த்துவார். (ம-10)

## விளையாட்டு விழா

காலையடி ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு மறுமலர்ச்சி மன்ற விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் எஸ். மோகனராஜன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தலைவர் என். திரிலோகநாதன் கலந்துகொள்வார்.

## காப்புறுதிக் கூட்டுத்தாபனம் பொறுப்பேற்பு

வரையறுக்கப்பட்ட ஜனசக்தி காப்புறுதி கூட்டுத்தாபனம், நேற்றுமுன்தினம் தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றுள்ளது.

இது தொடர்பாக அரசுக்கும் அந்த நிறுவனத்துக்குமான உடன்படிக்கை நேற்றுமுன்தினம் கைச்சாத்திடப்பட்டது.

அதன் பிரகாரம், தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் 51 சதவீதமான பங்குகள், ஜனசக்தி காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு மாற்றப்பட்டுள்ளன.

எஞ்சிய 49 சதவீத பங்குகள் அரசு தன்வசம் வைத்திருக்கும்.

அந்தப் பங்குகளில் 10 சதவீதமானவை ஊழியர்களுக்கு வழங்கப்படும்.

காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக தேசமானிய நிஸங்க விஜயவர்த்தனா தெரிவுசெய்யப்பட்டார்.

தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் தமது வேலைகளை இழக்கமாட்டார்கள் என்று ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் உறுதியளித்துள்ளது. (ஐ-ஒ)

## 13 புலிகள் உயிரிழப்பு

வவுனியா,ஜூன்23

பல்வேறு சம்பவங்களில் உயிரிழந்த 13 விடுதலைப் புலி உறுப்பினர்களின் பெயர்களை 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்துள்ளது.

O கடந்த 13ஆம் திகதி மட்டக்களப்பு, வந்தாறுமூலைப் பகுதியில் ஏற்பட்ட மோதலில் பரணிகாந்த் (பாக்கியராஜா அமிர்தலிங்கம் - மட்டக்களப்பு) -

O கடந்த 15ஆம் திகதி மன்னார், கட்டை அடம்பன் பகுதியில் இடம்பெற்ற மோதலில் பிரியங்கன் (வேலாயுதம் பாலகிருஸ்ணன் - திருகோணமலை), பிறையாளன் (பத்மநாதன் பத்மலோஜன் - யாழ்ப்பாணம்)-

O கடந்த 17ஆம் திகதி மன்னார், அரிப்பு அல்லிராணிக்கோட்டையில் ஏற்பட்ட எதிர்பாராத மோதலில் பன்மராசன் (பாலசுப்பிரமணியம் ரவிச்சந்திரன் - யாழ்ப்பாணம்), ரகுராம் (பாலகிருஸ்ணன் மோகனராஜ் - யாழ்ப்பாணம்) -

O கடந்த 18ஆம் திகதி முகமாலையில் அருவிழி அல்லது செங்கலை (செல்லத்துரை சிவதர்சனி - யாழ்ப்பாணம்), அரியகுண்டான் பகுதியில் சுடர் (சிவராசா மதனரூபன் - யாழ்ப்பாணம்), நாகர்கோயில் பகுதியில் கலைநேசன் (சண்முகம் முத்துக்குமரன் - அம்பாறை) -

O கடந்த 19ஆம் திகதி முல்லை மாவட்டத்தில் சுகவீனம் காரணமாக மறவன் அல்லது ஞானச்சந்திரன் (குணரட்ணம் பிரதீபன் - கிளிநொச்சி), மணலாறு பகுதியில் துணைப்படையைச் சேர்ந்த வசந்தன் (சண்முகம் வசந்தன் - மன்னார்), நிமால் (அன்ரன் விஜயகுமார் - யாழ்ப்பாணம்), முகமாலைப் பகுதியில் பிரியதர்சினி (அருள்நாயகம் சுகந்தினி - யாழ்ப்பாணம்), சுசி (மகாலிங்கம் சுஜாததா- யாழ்ப்பாணம்) ஆகியோரும் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-10)

## ஜூன் மாத நிவாரணம் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜூன்23

குடாநாட்டு மக்களுக்குரிய ஜூன் மாத உலர் உணவு நிவாரணம் இவ்வாரம் முதல் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான பொருள்கள் யாவும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் தெரிவித்துள்ளார். (ஐ-4-6)

## உபநயன அழைப்பு

**நிகழும் மங்களகரமான விஷு வருஷம் ஆனி மாதம் 10ஆம் நாள் நாளை (24-06-2001) ஞாயிற்றுக்கிழமை பூச நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய பகல் 10-25 மணி முதல் 11-30 மணி வரை வரும் சிங்க லக்கின சுபமுகூர்த்தத்தில்,**

எமது ஏக புத்திரன

சிரஞ்சீவி

### ஜெயச்சந்திர சர்மாவுக்கு

**சௌள உபநயனம் (பூணூல் தரித்து) பிரம்மோபதேசம் செய்ய நிச்சயித்திருப்பதால் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள மேற்படி முகூர்த்தத்தின் போது சுற்றம் சூழ வருகை தந்து புத்திரனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.**

**தங்கள் நல்வரவை விரும்பும்**

**பொ.இராமச்சந்திர சர்மா**
**இ.குகனேஸ்வரியம்மா**
*மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.*

தற்போதைய முகவரி:-
*தம்மளை,*
*அளவெட்டி.*

(89257)

உ

புன்னாலைக்கட்டுவன்

ஆயாக் கடவை சித்தி விநாயகர் தேவஸ்தானம்

**கணபதி ஹோம 1008 சங்காபிஷேக;**

## கொடியேற்ற விஞ்ஞாபனம்

நிகழும் விஷு வருடம் ஆனிமாதம் 10 ஆம் நாள் நாளை (24-06-2001) ஞாயிறு பி.ப. 4.00 மணிக்கு விநாயகர் வழிபாடு - யாகபூஜை முதலியன நடைபெற்று விஷேட திரவிய ஹோமம் நடைபெறும்.

25-06-2001 திங்கள் அதிகாலை 5.00மணிக்கு 1008 சங்கு பூஜை நடைபெற்று மங்களவாத்திய சகிதம் காலை 7.00மணிக்கு பிரதான கும்பம் வீதிவலமாக எடுத்துவரப்பெற்று எம்பெருமானுக்கு சங்காபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது. அன்றைய தினம் காலை மஹோற்சவ கிரியைகள் ஆரம்பமாகி 10.30 மணிக்கு கொடியேற்ற வைபவம் இடம்பெறும்.

ஐங்கரன் அடியார்கள் அனைவரும் மேற்படி கிரியைகளில் பங்குபற்றி நலமே வாழ வேண்டுகிறேன்.

**- உபயகாரர்.**

*விளம்பர அன்பளிப்பு:*

**கண்ணன் ஸ்ரோர்ஸ்**
*புன்னாலைக்கட்டுவன்.*

**சித்திவிநாயகர் விவசாய பல்பொருள் வாணிபம்.**
*புன்னாலைக்கட்டுவன்.*

(89276)

Robin Lemon றொபின் லெமன் றொபின் லெமன் றொபின் லெமன் றொபின் லெமன் றொபின் லெமன் Robin Lemon

Robin Lemon Robin Lemon Robin Lemon

வாடிக்கையாளர்களுக்கு.....

நற்செய்தி!

3 WRAPPERS




3 றொபின் லெமன் சவர்க்கார உறைகளை

உங்கள் வியாபாரியிடம் கொடுத்து

ஒரு சவர்க்காரக் கட்டியை

இலவசமாகப் பெறுங்கள்!

வெண்மையான சலவைக்கு

லெமன் வாசனை கலந்த

"றொபின் சோப்"பையே உபயோகியுங்கள்

(89059)

Robin Lemon றொபின் லெமன் றொபின் லெமன் றொபின் லெமன் றொபின் லெமன் றொபின் லெமன் Robin Lemon

# சின்னஞ்சிறு விளம்பரம்


## குருவிகள் விற்பனைக்கு

Love Birds குருவிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- தனபாலசிங்கம், 19,முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச்சந்தையடி, நல்லூர். (89200)

## விற்பனைக்கு

குளிர்சாதனப் பெட்டி (SISIL 60), WASHING MACHINE (BRAND NEW), ஸ்பிறிங் கட்டில், ELECTRIC OVEN, மினமோட்டார், 2000W செய்த தைனமோ, RADIO என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு:- ராஜன் (படப்பிடிப்பாளர்), நவாலி வீதி, ஆனைக்கோட்டை. (89270)

லவ்பேர்ட்ஸ் குருவிகளும் பொமனேரியன் நாய்க்குட்டிகளும் விற்பனைக்குண்டு. ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் பார்வையிடலாம். பி.திலீபன், மூணாமலை ஒழுங்கை, சுதுமலை அம்மன் கோயிலடி. (89298)

குளிர்சாதனப் பெட்டி KELVENATER 2 DOOR, KENWOOD 5 அடுக்கு ORIGINAL JAPAN, STEREO ரேடியோ செற் மற்றும் வீட்டுத்தளபாடங்கள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு:- மு.கிருபாலன், 333A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.2827. (89316)

21,200 தொடர் இலக்கமுடைய கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட ஓட்டோக்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:- 23,உடுவில் வீதி, மானிப்பாய். (89328)

## நாய் விற்பனைக்கு

ஒரு ALSATION பெண் நாய் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- தனபாலசிங்கம், 19,முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச்சந்தையடி, நல்லூர். (89322)

## உடன் விற்பனைக்கு

வீட்டுப்பாவனைக்கு உகந்த எவர்சில்வர் பொருள்கள், Lumala Ladies Cycle, TKD FAN, Rice cooker, சாப்பாட்டு மேசை 3 1/2X4 கபேட், படுக்கை விரிபுகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 639/2, நாவலர் வீதி, நல்லூர், யாழ்பபாணம். (89314)

## O/L கணிதம்

புதிய, பழைய பாடத்திட்டத்தில் Distinction, Credit பெறுபேறடைய ஆண்டு 6-10 வரையும் ஆரம்பத்திலிருந்து (Paper Class வரை) கற்பிக்கப்படும். அனுபவமுள்ள ஆசிரியர். 85, சிவன்கோயிலடி, (சிவன் கோயில் பின்புறம்) திருநெல்வேலி. (89319)

## கார் விற்பனைக்கு

A-60 கேம்பிறிச் கார் (நல்ல நிலையில் உள்ளது) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- கு.சதானந்தன், 5/1, புகையிரத வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (89295)

## திருமண சேவை

டாக்டர் 1970ஆம் ஆண்டு ரேவதி நட்சத்திரமுடைய மணமகனுக்கு B.Sc. மணமகள் தேவை. அத்தோடு பட்டதாரிகள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், பொருளியலாளர்கள் மற்றும் கிளாக் பிரஜா உரிமையுள்ள மணமகன்களுக்கு மணமக்கள் தேவை. தொடர்பு:- 'கமலக்கண்ணன் திருமண சேவை', No.3, மூத்தவிநாயகர் வீதி, கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம். நேரில் சந்திக்கவும். (திங்கள், புதன், வெள்ளி, சனி, ஞாயிறு 10.30-5.00 மணி வரை) (89275)

## வியாழ மாற்ற பலாபலன்கள்

வியாழ மாற்றமும் 08.11.2001 முதல் 4 மாதங்களுக்கு வியாழ வகிர பலன்களும் அடங்கியன ரூபா 10/= எங்கும் விற்பனையாகின்றன. எல்லா ராசிப்பலன்களும். கணிப்பாசிரியர்:- சத்யா, 3ஆம் மைல், ஆனைக்கோட்டை. T.P.021-2753 (89326)

## புறொயிலர் விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் தினமும் விற்கப்படும். சுத்தம் செய்தும கொடுக்கப்படும். தொடர்பு:- சங்கீத், 40,விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். (கல்வியங்காட்டுச் சந்தைக்கு அருகாக) (89317)

## றெஜிபோம் சீற் விற்பனைக்கு

6'X3'X6" றெஜிபோம் சீற் உடன் விற்பனைக்கு. விலை ரூ. 2300/=. துண்டுகளாகவும் பெறலாம். தொடர்பு:- 100, பிரதான வீதி, யாழ்ப்பாணம். T.P.2347. (89321)

## இலகு திருமண சேவை

1957, கார்த்திகை, ஆசிரியைக்கு மணமகன் அரச/தனியார் துறையில் தேவை. விவாகரத்துப் பெற்ற ஆண்கள், பெண்கள் விண்ணப்பங்கள தேவைப்படுகின்றன. வெளியூர், உள்ளூர் மணமக்கள் தேர்வுக்கு நாடுங்கள்: ஞாயிறுகளில் துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (89203)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், சேவல், கல்பேட்ஸ் இறைச்சிக்கோழி மொத்தமாகவும், சில்லறையாகவும் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். சுத்தம செய்தல் இலவசம். 31,மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம், (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (89191)

Broilers, Cullbirds, Cockerels soup இறைச்சிக்கோழிகள் சுத்தம்செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் காலை 6.30 - மாலை 6.00 வரை பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:-தனபாலசிங்கம், 19,முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (89199)

BROILER இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. திரு.றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.3529, 2867. (89311)

புறொயிலர் இறைச்சிக்கோழி மலிவு விலையில் விற்பனைக்குண்டு. புறொயிலர் 1Kg விலை 160/=, கல்பேட்டின் விலை 140/= சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். குணம் கொத்து றொடிக் கடைக்கு அடுத்த வீட்டில். இல. 334, கே.கே.எஸ். வீதி, சிவன் கோயிலடி. வாடிக்கையாளர்களுக்குக் கழிவு உண்டு. (89323)


# அமைச்சர் நிதி ஒதுக்கீடு

உடுவில் கிழக்கு சபாபதிப்பிள்ளை வீதியில் கட்டப்பட்டுவரும் விழிப்புலன் இழந்தோர் வாழ்வகத்தின் கட்டட வேலைகளுக்கென வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முதற்கட்டமாக 12லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்து வழங்கியுள்ளார்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபைத் தலைவர் க.கமலசேகரன் வாழ்வகத்தின் அவசியம் பற்றி வலியுறுத்தியதை அடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த நிதி ஒதுக்கீட்டை வழங்கியுள்ளார். (ம-152)




## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சிவஸ்ரீ

ச.மகேஸ்வரக்குருக்கள் அவர்கள்

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் குருபீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அன்னார் நீண்ட காலம் சகலசம்பத்துக்களுடனும் வாழவேண்டுமென நயினை இரட்டங்காலி முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

நயினை இரட்டங்காலி முருகன் ஆலய அறங்காவலர் சபையினர், நயினாதீவு.

(89329)

## அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

நாளை (24-06-2001) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாக்கரு, கரணவாய் கிழக்கில் மேற்படி கட்சியின் கருத்தரங்கு ஒன்று நடைபெறும். ஆதரவாளர்களை அன்புடன் அழைக்கிறோம்.

*மாத்தனை ஒழுங்கை,*
*கொக்குவில்.* (89313)

தலைவர்
*அ.இ.த.கா.*

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்
10 - 06 - 1927

இறைவனடியில்
24 - 05 - 2001

### அமரர்
### முருகேசு மார்க்கண்டு

அன்புத் தந்தையே!

"நோயில் அழுந்தி நொந்து மனம் வாடாமல்
பாயில் கிடவாமல் பாவியேன் காயத்தை ஒரு நொடி
யிற் போக்கி உன் பாதம் சேர் அப்பனே" என்று
கேட்ட வண்ணம் நாராயணன் பாதத்தைப் பற்றி
விட்டீர்களே!

தங்கள் ஆத்மா இறைவன் கருணைக்கு ஆளாக இறைவனை வேண்டுகின்றோம்.

இன்று (23.06.2001) சனிக்கிழமை அன்னாரது வீட்டுக்கிருத்தியமும் ஆத்ம சாந்தி வழிபாடும் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அதில் கலந்து மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*அராலி தெற்கு,*
*வட்டுக்கோட்டை.* (89330)

-குடும்பத்தினர்.-

உ



சுவிஸ்ஸர்லாண்ட் - அடிஸ்வில்

## ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலயத்தில்

சபரிமலை ஸ்ரீ ஐயப்பசுவாமிக்கு

## மஹா கும்பாபிஷேகம்

கர்மாரம்பம்:- *25. 06. 2001 திங்கட்கிழமை காலை – 9. 00 மணி*

பஞ்சகுண்ட பக்ஷ மஹா யாகாரம்பம்:-
*25. 06. 2001 திங்கள் – மாலை – 6 மணி*

நெய் அபிஷேகம் :- 26. 06. 2001 செவ்வாய்க்கிழமை

மஹா கும்பாபிஷேகம் :-
*ஆனி மாதம் 13ஆம் திகதி 27. 06. 2001 புதன்கிழமை* பகல் 12. மணி

பிரதிஷ்டா பிரதம குரு:-

"சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி"
'சிவாகம கிரியா கலாநிதி'
ஸ்ரீ ஐயப்பதாச சாம்பசிவ சிவாச்சாரியார் J.P

ஆலய பிரதம குரு:-

"குகபூஜா துரந்தரர்"
சிவஸ்ரீ த.சரஹணபவானந்தக் குருக்கள்

சாதகாசிரியர்:-

*'சிவாகம பூஷணம்'*
சிவஸ்ரீ பால.ஜெகன்நாதக் குருக்கள் - இணுவில்

மற்றும் பல குருமார்கள் கலந்து கிரியைகளை நடத்துவார்கள்

*ADLISWIL*
*SWITZERLAND.*

ஆலய பரிபாலன சபையினரும்
உபயகாரர்களும்.

# இந்த வார இராசி பலன்

## 24 - 6 - 2001 - 30 - 6 - 2001

## மகாதேவா ஜோதிடம்

| | | | |
|---|---|---|---|
| | வெ | புத சனி | கு வி ரா |
| | இராசிச் சக்கரம் | | சந் |
| | | | |
| செ கேது | | | |

**மாற்றும்:-**
***24 - 06 - 2001 பூசம் கடகம் இராசியில் சந்திரன் நிற்கும்.***

அரசியலில் மெல்ல மெல்லப் பாயும் தண்ணீர் கல்லையும் உருட்டிப் பாயும் நிலை தோன்றும். உலகம் தொடர்ந்து ஒரு நிர்ப்பந்த நிலையை கொடுத்தபடி இருக்கும். நியாயமான பேச்சுவார்த்தைக்கு எல்லோரும் கட்டுப்பட்டுத்தான் ஆகவேண்டும் என்ற நிலை ஏற்படும். இந்தியாவில் அரசியல் குழப்பநிலை தோன்றும். மேற்கு உலகம் தொடர்ந்து தனது கொள்கைகளை ஏனைய நாடுகளுக்கு நடைமுறைப்படுத்தியபடி இருக்கும். பசிபிக், அத்திலாந்திக் இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளில் விட்டு விட்டு இயற்கை சீற்றங்களைக் கொடுக்கும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

உங்களுக்கு கிறிமினல் புத்தி அடிக்கடிவரும். சட்ட திட்டப் பீடங்களை காசு காணி சம்பந்தப்பட்ட விசயங்களுக்காக, நாடுவீர்கள். தொழில் பீடத்தில் நிதானமாக இருக்கவும். அடிக்கடி கொதித்தெழுந்து பேசி மற்றவர்களின் வெறுப்பைச் சம்பாதிப்பீர்கள். குடும்பச் சுப பேச்சுக்கள் நன்மை தரும். வீடு, வாகன வசதிகளைத் தேடிக்கொள்ளுவீர்கள். நரம்புப் பலவீனம் பித்த ரோகம், உஷ்ண பீடைகள் என்பன கொடுக்கும். பாதுகாப்புப் பகுதி, தரகுத்துறை, இரும்பு, எண்ணெய் சம்பந்தப்பட்ட துறையினர்களுக்கு மாற்றங்களும் நன்மைகளும் கிடைக்கும்.

★ அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், புதன், வெள்ளி.

### இடபம்

புருஷனுடன் ஒத்துப் போகாத மனைவியும் மனைவியுடன் சேர்ந்து வாழாத கணவன்மார்களும் அநேகர் இவ்வுலகில் உள்ளனர். நீங்கள் தொழில் ஸ்தானத்தில் பொறுமையாக மற்றவர்களுடன் சேர்ந்து செயற்படுங்கள். எதிர்ப்பாலார்கள் நன்மை செய்து தருவார்கள், அடிக்கடி மனமாற்றம் நஷ்டங்களைக் கொடுக்கும். நெஞ்சு வருத்தம், சலவருத்தம் வரும் மருந்துத்துறை, சட்டத் துறை, புடைவைக்கடை, சாய்புச் சாமான்கள், பிரயாணத்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், புதன், வெள்ளி.

### மிதுனம்

செவ்வாய்த் தோஷம் மிகப் பயங்கரமானது, பெரும் அழிவுகளைத் தரவல்லது. மிகப்பக்குவமாக செவ்வாய்த் தோஷத்தை அனுசரிக்காதவர்கள் மிகத் துன்ப நிலைகளை அடைவார்கள். தொழில் ஸ்தானத்தில் வாக்குக் கலகங்கள் வர இடமுண்டு. களவுகள் கூடப் போய் வீண்பழியைச் சுமக்க நேரிடலாம். மலச்சிக்கல், தலைவலி, அடிகாயம், களைப்பு என்பன வர இடமுண்டு. போக்குவரத்துத் துறை, விவசாயத்துறை, ரீவி, டெக், ஹோட்டல் துறை போன்றதுறையினர்கள் பலவிதமாற்றங்களும் நன்மைகளும் அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், புதன்.

### கடகம்

அரசியல் பேசி காலத்தைக் கழிப்பவர்கள் புத்திசாலிகள் எனச் சொல்ல முடியாவிட்டாலும், அவர்களுக்கு அரசியல் பேசிவருவதனால் மனச் சாந்தி கிடைப்பதை எவரும் மறுக்க முடியாது. தொழில் ஸ்தானத்தில் இந்த அனுபவம் உங்களுக்கு நிறைய வரும் காலமாகும். புதிய மாற்றம் ஆனால் எதிர்பார்த்தது கிடைக்காது. தூரதேசச் செய்திகளால் மகிழ்ச்சி, வரவுக்கள் வர இடமுண்டு. பெரிய எண்ணங்கள் — கற்பனைகளைச் சொல்லிச் சொல்லிக் காலம் கழிப்பீர்கள். மனஉறுதியுடன் வாழுங்கள். நரம்புச்சோர்வு, மனத்தளர்ச்சி, சளி போன்றன வரும். செய்தித்துறை, சட்டத்துறை, விவசாயத்துறை, கொம்பியூட்டர் போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், புதன், சனி.

### சிங்கம்

சும்மா இருந்தால் நீதி நியாயம் கிடைக்குமா? உள்ளதை உலகிற்கு வெளிப்படையாக்குபவர்களாற்றான் உண்மையான நீதி கிடைக்கின்றது. எனவே தொழில் ஸ்தானத்தில் நீதியைச் செலுத்தி நல்லதைச் செய்யுங்கள். புதிய பொறுப்புக்கள் கிடைக்கும். பெரியவர்கள் வாழ்த்துவார்கள். நாரிப் பிடிப்பு, கண்கூச்சம், உஷ்ண பீடைகள், காலில் அடிபடல் என்பன வரும், விவசாயத் துறை, குருத்துறை, மருந்துத்துறை போன்றவர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்கள்:- புதன், சனி.

### கன்னி

ஒருவரின் பணம், பதவியை வைத்துத்தான் அவரை எடை போடுகிறார்கள். எனவே தொழில் ஸ்தானத்தில் கவனமாக இருங்கள், எதிர்ப்பாலாரதுஎதிர்ப்புக்கள் வரும். வீண்பழி கேட்பீர்கள். கொடுக்கல் வாங்கலால் வீண் பிரச்சினைகள் சிலருக்கு ஏற்படும். கிருமித்தாக்கம், மூல வருத்தம், நாரிநோ, சளித் தொல்லை என்பன கொடுக்கும். இசைத்துறை, செய்தித் துறை, பிரயாணத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்கள்,- புதன். வெள்ளி. சனி.

### துலாம்

ஒருவரில் அடிப்படையான நம்பிக்கை வைத்து விட்டால் அதை எவராலும் மாற்ற முடியாது. தர்மத்திற்காகப் போராடி வெற்றி கிடைக்கும். தொழில் ஸ்தானத்தில் மாற்றங்களும், புதிய பொறுப்புக்களும் கிடைக்கும். பிறருக்கு ஆலோசனை சொன்னபடி இருப்பீர்கள். குடும்பத்தினரின் காரியங்களால் மனத் திருப்தி ஏற்படும். எண்ணெய்த்துறை, தரகுத்துறை, குருத்துறை, நிர்வாகம், பாதுகாப்புத்துறை போன்ற துறையினர்களுக்கு நற்பலன்கள் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, புதன், வெள்ளி, சனி.

### விருச்சிகம்

அப்பாவின் சொந்தத்தில் உரிமை வரும். அம்மாவின் சொந்தத்தில் கடமை வரும். ஆனால் தொழில் செய்கின்ற இடத்தில் என்ன வரும்? பணம் வரத்தானே செய்யும். அடிக்கடி படபடப்பு வரும். புதியவர்களின் நட்புக்கள் கிடைக்கும். கிருமித்தாக்கம், மூக்கு, தலை வருத்தங்கள், சலஎரிவு, உஷ்ண பீடைகள் என்பன வர இடம்உண்டு. பாதுகாப்புத் துறை, மருத்துத்துறை, இரும்புத்துறை, இசைத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, புதன், வெள்ளி, சனி.

### தனுசு

தகுதிக்கு வேலை கிடைக்கவில்லை என்ற ஏக்கம் உங்களுக்கு. வரவு செலவு நிலையில் ஒரு தளம்பல் நிலை. உங்கள் ஆலோசனைகளை வைத்தே உங்களை மடக்கும் நிலை. இதனால் அச்சநிலை தோன்றும். அடிக்கடிகோபம், குடும்பத்தினருடன் வாக்குக் கலகம், புதிய பொருள் வரவு என்பன இருக்கும். இடமாற்றம் சிலருக்கு வரஇடமுண்டு. கைகால் அடிபடல், இடுப்பு நோ, வயிற்றுநோ என்பன வரும். தோட்டத்துறை, வங்கித்துறை, பாதுகாப்பு, மருந்து, சட்டம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, திங்கள், புதன், வெள்ளி.

### மகரம்

அடிக்கடி கட்சி மாறுபவர்களால் பல துன்பங்கள் மற்றவர்களுக்கு மாத்திரமல்ல அவர்களுக்கும் வரும். எனவே தொழில் ஸ்தானத்தில் நிதானமாக இருந்து செயற்பட்டு வருமானத்தைக் கூட்ட முயலுங்கள். எதிர்பார்த்தது கிடைக்குமா என்ற ஏக்கம் அடிக்கடி வரும். இடமாற்றங்கள் சிலருக்கு ஏற்பட இடம் உண்டு. நரம்புப்பிடிப்பு, தோல் வருத்தம், தலைவலி, கைகால் பிடிப்பு என்பன வரும். பிரயாணத்துறை, வியாபாரத்துறை, ரீ. வி, டெக் துறை, கொம்பியூட்டர் துறை, பாதுகாப்புத்துறை போன்ற துறையினருக்கு மாற்றங்கள் கிடைக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள் வெள்ளி, சனி.

### கும்பம்

காதலுக்கு சீதனம் கேட்பவர்கள் பொருத்தத்தை கவனிக்கிறார்களா? பொருத்தமற்ற திருமணங்கள் நிச்சயம் கலக்கும், பிரிவைக் கொடுக்கும். வாழ்க்கையில் பொருத்தம் — தொழிலில் பொருத்தம் நிச்சயம் இருந்தால் வெற்றிகள் கிடைக்கும். உங்களின் முயற்சிகளால் பல நன்மைகள் ஏற்படும். பிறருக்குப் பல ஆலோசனைகளைச் சொன்னபடி இருப்பீர்கள். பலர் நன்மை அடைவார்கள். புதிய பொறுப்பு, காரிய சித்தி என்பன அனுகூலமாகும். நெஞ்சு படபடப்பு, தொண்டைவரட்சி, கைகால் பிடிப்பு, கால்வருத்தம் என்பனவரும். போக்குவரத்துத் துறை, நகை, புடைவைத் துறை, விவசாயத்துறை, குருத்துறை, தரகுத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்:-

★ அதிர்ஷ்டநாள்:- திங்கள், சனி.

### மீனம்

அளவுடன் பிள்ளைகளைப் பெற்று வாழுபவர்களுக்கு ஓரளவு நிம்மதிஉண்டு. காணி பூமிப் பிரச்சினை ஒன்று தேடி வந்து தொல்லைகொடுக்கும். தொழில் ஸ்தானத்தில் புதிய வருமானங்கள் பெருகிவரும். தூரதேசச் செய்திகளால் நன்மைகள் கிடைக்கும். கலகத்தைப் பிறப்பித்து, நியாயம் அடைவீர்கள். கோவிப்பது போன்று நடிப்பீர்கள். தனிமையில் இனிமை காணுவீர்கள். வீடு, வாகன சுகம் கொடுக்கும். இடுப்புவலி, சளி, குடல் வருத்தம், உஷ்ண பீடைகள் என்பன வரும். மருந்துத்துறை, வியாபாரத் துறை, விவசாயத்துறை, காவல்துறை, குருத்துறை சட்டத்துறை போன்றதுறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்:- திங்கள், சனி.

---

## கூட்டங்கள்

கோப்பாய், ஜூன் 23

யாழ். மாவட்ட அரசாங்க பொதுச் சேவை கல்வி சாரா ஊழியர் சங்கத்தின் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ-72)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புனரமைப்பும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும்.

(ம)

## மாதாந்த உதவிப்பணம்

நவாலி, ஜூன் 23

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களினதும் மற்றும் காசநோய், தொழுநோய், யானைக்கால் நோய், புற்றுநோய் என்பனவற்றுக்கான உதவிப் பணத்தினைப் பெறுபவர்களினதும் ஜூன் மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தினால் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(ம-100)

## கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 23

தூரிகை நுண்கலை வளாக நிறுவனத்தின் மனைப்பொருளியல் கண்காட்சி நாளை சனிக்கிழமையும், நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வீதியில் உள்ள நிறுவனத்தில் நடைபெறும்.

வருடாந்த சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம் பெறும்.

(க-173)


## வாழ்த்தி வணங்குகின்றோம்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய ஆதீனக் குருமணி

**சிவஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள்**

அகில இலங்கை இந்துமத குருபீடாதிபதியாக ஏகமனதாகத் தெரிவானமையையிட்டு அவரை மனதாரப் பாராட்டி வாழ்த்தி வணங்குகின்றோம்.

ந. ஜெகநாதன்
அம்பிகை பல்பொருள் வாணிப நிலையம்,
நயினாதீவு.
(3ஆம் திருவிழா உபயகாரர்)

(89320)

## இதய அஞ்சலி

**பொன் சபாபதி**

ஓய்வு பெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர் பொன் சபாபதி அவர்களின் மறைவுக்கு எமது இதய அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்.
கலைவாணி வித்தியாசாலை.

கைதடி மேற்கு,
கைதடி.

(சி/17177)

## கண்ணீர் அஞ்சலி

**பொன் சபாபதி**

(முன்னாள் கிளிநொச்சி மாவட்ட உதவிக் கல்விப் பணிப்பாளரும், மாகாணக் கல்வி அமைச்சின் வன்னி இணைப்பாளரும்)

எங்கள் கிராமத்தில் எழுச்சியையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்திய ஆசான் பொன் சபாபதி அவர்களின் மறைவினால் நாங்கள் தாங்க முடியாத சோகத்தில் ஆழ்ந்துள்ளோம்.

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

- கைதடி வடக்கு - நவபுரம் வாழ் மக்கள்

(89315)

## வட அயர்லாந்தில் மீண்டும் மோதல்!

பெல்பாஸ்ட்,ஜூன்23

வட அயர்லாந்தில் கத்தோலிக்கர்களுக்கும், புரட்டஸ்தாந்தினருக்கும் இடையே வன்முறை மோதல்கள் மூண்டுள்ளன.

பெல்பாஸ்ட் நகரில் கடந்த வாரம இடம்பெற்ற மோதல்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த சில மணித்[illegible]யில் மீண்டும் அங்கு வன்முறை மோதல்கள் தொடங்கியதாகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

கட்டடங்களுக்குச் சேதங்கள் விளைவிக்கப்பட்டதுடன் வாகனங்கள் தீவைத்துக் கொளுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக, பொலீஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளையும், றப்பர்த் தோட்டாக்களையும் உபயோகித்தனர். (ஒ)

## மஸிடோனியாவில் 'நேட்டோ' கண்காணிப்பு

ஸ்கொப்ஜே,ஜூன்23

மஸிடோனியாவில், அல்பேனியத் தீவிரவாதிகள் ஆயுதங்களை ஒப்படைப்பதைக் கண்காணிப்பதில் 'நேட்டோ' நாடுகளின் கூட்டுப்படை ஈடுபடுகிறது.

கொசோவா எல்லையை அடுத்துள்ள அல்பேனியர்கள் அதிகம் வாழும் மஸிடோனியப் பகுதிகளை கோசோவாவுடன் இணைக்கப் போராடிய தீவிரவாதிகளே தற்போது ஆயுதங்களை ஒப்படைக்க இணங்கியுள்ளனர்.

## கண்டனம்

இந்தியாவின் மணிப்பூர் மாநிலத்தில் ஏற்பட்ட மக்கள் கிளர்ச்சியையடுத்து பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவை மீறுவோரைக் கண்டதும் சுட மாநில அரசு கட்டளையிட்டிருப்பதை சர்வதேச மன்னிப்புச்சபை கண்டித்துள்ளது.

# பலஸ்தீனத் தீவிரவாதிகளைத் தாக்க இஸ்ரேலியப் படையினருக்கு அனுமதி

டெல்அவிவ்,ஜூன்23

பலஸ்தீனத் தீவிரவாதிகளின் நிலைகள் மீது மீண்டும் தாக்குதல்களை நடத்த அனுமதி கிடைத்துள்ளதாக இஸ்ரேலிய இராணுவம் நேற்று முன்தினம் தெரிவித்தது.

இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சரவை 3 மணி நேரமாக நடத்திய ஆலோசனைக் கூட்டத்தின் பின்னர் இந்த அனுமதியை வழங்கியதாக இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

ஸ்திரமற்ற நிலையில் காணப்படும் மேற்காசிய யுத்த நிறுத்தத்தை அதிக வலுவாக்கும் நோக்கில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மேற்குக் கரைப் பிரதேசத்துக்கு விஜயம் செய்ய இருந்த வேளையிலீ இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதேசமயம் கடும் போக்காளர்களான இரு இஸ்ரேலிய அமைச்சர்களும், 15 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பலஸ்தீனர்களுக்கு எதிராக முழுமையான யுத்தத்தைக் கோரும் மகஜர் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளனர்.

கடந்த 8 மாதங்களாக இஸ்ரேலியருக்கும் பலஸ்தீனருக்கும் இடையில் மேற்குக் கரைப் பிரதேசத்தில் நிகழ்ந்த மோதல்களை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியாக அப்பகுதியில் யுத்த நிறுத்தம் அமுல்படுத்தப்படுவதும் -

யுத்த நிறுத்தத்தை நிராகரித்த பலஸ்தீனத் தீவிரவாதிகள், இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டுவருவதும் -

தெரிந்தவையே. (ஒ)



1914-18ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற முதலாம் உலகப் போரில் உயிரிழந்த பிரிட்டிஷ் போர் வீரர்கள் 24 பேரினது எலும்புக்கூடுகள் பிரான்ஸின் அராஸ் நகரில் கண்டுபிடிக்கப்பட்டன.

பி.எம்.டபிள்யு.கார் நிறுவனத் தொழிற்சாலையின் கட்டுமானப் பணிகளின் போதே தற்செயலாக இந்த எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. கைகள் கோர்க்கப்பட்ட நிலையில் காணப்படும் இந்த எலும்புக்கூடுகளின் கால்களில் உள்ள சப்பாத்துகள் சிதைவடையாது உள்ளன.

பொதுநலவாய போர்ப் புதை குழிகள் ஆணைக்குழு உறுப்பினர்கள், கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகளை புதைகுழியிலிருந்து சிதையாமல் மீட்கும் பணியில் கவனத்துடன் ஈடுபட்டிருப்பதையும், எலும்புக்கூடுகளில் சிலவற்றையும் படங்களில் காணலாம்.

## அபுசாயப்பின் பிரதேசத்தில் 3 மனிதத் தலைகள்

மணிலா,ஜூன்23

பிலிப்பைன்ஸில் பிரிவினை கோரும் 'அபுசாயப்' இஸ்லாமியத் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் துண்டிக்கப்பட்ட 3 மனிதத் தலைகள் காணப்பட்டதாக மணிலாப் பொலீஸார் தெரிவித்தனர்.

'அபுசாயப்' தீவிரவாதிகள் 20 பேரை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளனர். அவர்களில் மூவரைத் தாம் கொன்று விட்டதாகத் தீவிரவாதிகள் ஏற்கனவே அறிவித்திருந்தனர். ஆனால் அதற்கான ஆதாரங்கள் கிடைக்கவில்லை என்று பொலீஸார் கூறிவந்தனர்.

ஆயினும், தற்போது கிடைத்த தலைகள் பணயக் கைதிகளினுடையவைதான் என்பது உறுதிப்படுத்தப்படவில்லை என்று பொலீஸார் தெரிவித்தனர். (ஒ)

## இந்தியாவில் 'எயிட்ஸ்' தடுப்பு நடவடிக்கை

புதுடில்லி,ஜூன்23

தாயிடமிருந்து, பிறக்கும் குழந்தைக்கு 'எயிட்ஸ்' கிருமிகள் பரவுவதைத் தடுக்கும் மருந்துகள் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

ஒரு நோயாளிக்கு ஆயிரம் ரூபா வீதம் இந்த மருந்துக்காக செலவிடப்படவுள்ளது. (ஒ)

## தீவிரவாதி கைது!

புதுடில்லி,ஜூன்23

இந்தியத் தலைநகரில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தை குண்டு வைத்துத் தகர்க்க திட்டப்பட்ட சதியில் சம்பந்தப்பட்ட மேலும் ஒருவரை டில்லிப் பொலீஸார் பாட்னாவில் நேற்று கைதுசெய்தனர்.

மொகமட் அஷ்ரப் என்ற அந்த நபர் வெடிகுண்டுகள் ஏற்றப்பட்ட காரை ஓட்டிச் சென்று, அமெரிக்கத் தூதரகத்தின் மீது மோதவேண்டுமென்று சதித்திட்டம் தீட்டப்பட்டிருந்ததாக பொலீஸார் தெரிவித்தனர். (ஒ)

### ரஷ்யாவில் சம்பவம்:

# ராணுவத்தை விட்டு தப்பிய சிப்பாய் 7 வருடமாக காட்டில் தனித்து வாசம்

## வேட்டைக்காரர்களால் மீட்கப்பட்டார்

ரஷ்ய இராணுவத்தில் இருந்து தப்பியோடிக் கடந்த 7 வருடங்களாக நடுக் காட்டில் வாழ்ந்த ஒருவர் வேட்டைக்காரர்களால் கண்டுபிடிக்கப்பட்டார்.

சைபீரியப் பகுதியில் இராணுவ வீரராகக் கடமையாற்றிய இவர், சக வீரர்களால் துன்புறுத்தப்பட்டதால், 1994ஆம் ஆண்டு இராணுவத்திலிருந்து தப்பிக் காட்டுக்குள் சென்றார்.

கிழக்கு ரஷ்யாவில் உள்ள கம்சட்கா காட்டுப் பகுதியில் குடில் ஒன்றை அமைத்துத் தங்கிய அந்த வீரர், கடந்த 7 வருடங்களாக ஆபத்தான நடுக்காட்டில் தனியே வசித்தார்.

சமீபத்தில் கரடி ஒன்றைத் துரத்திச் சென்ற வேட்டைக்காரர்கள் சிலர், தனது குடில் தீப்பற்றியதால் எரிகாயங்களுக்கு உள்ளாகி வேதனைப்பட்டுக் கொண்டிருந்த அவரை அங்கிருந்து மீட்டு வந்து மருத்துவமனையில் அனுமதித்தனர். (ஒ)

### வீரப்பனைப் பிடிக்க அமைக்கப்பட்ட

# கூட்டுப்படை தலைவர் தேவாரத்தின் நியமனத்தை எதிர்த்து மனு தாக்கல்

சென்னை,ஜூன்23

சந்தன மரக்கடத்தல்காரன் வீரப்பனைப் பிடிக்க அமைக்கப்பட்டுள்ள தமிழக - கர்நாடகக் கூட்டு அதிரடிப் படைத் தலைவராக, ஓய்வுபெற்ற பொலீஸ் அதிகாரி வால்டர் தேவாரம் நியமிக்கப்பட்டதை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



வால்டர் தேவாரம்

முன்னர் வீரப்பனைப் பிடிக்கும் பணியில் தேவாரம் ஈடுபட்டபோது, மனித உரிமை மீறல் குற்றங்களைப் புரிந்ததாகத் தொடரப்பட்ட வழக்கு தற்போது நிலுவையில் இருப்பதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மக்கள் உரிமைக்கழகம், மக்கள் கண்காணிப்பகம் உட்பட சில மனித உரிமை அமைப்புகள் இணைந்து இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளன.

தேவாரம் ஓய்வுபெற்றவர் என்பதால், அவருக்கு கீழுள்ள அதிகாரிகள், அவரது கட்டளைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அந்த அமைப்புகள் தமது மனுவில் கூறியுள்ளன. (ஒ-10)

# மக்கள் கிளர்ச்சி மூண்டுள்ள அல்ஜீரியாவில் 7 பேர் பலி!

அல்ஜீயர்ஸ்,ஜூன்23

வடக்கு ஆபிரிக்க நாடான அல்ஜீரியாவில் மூண்டுள்ள மக்கள் கிளர்ச்சியில் ஏற்பட்ட வன்முறைகளில் இரு இராணுவத்தினர் உட்பட 7 பேர் கொல்லப்பட்டனர். 120 பேர் காயமடைந்தனர்.

அல்ஜீரியாவின் காபிலி பிராந்தியத்தில் பெர்பர் இனத்தவர்கள் கடந்த ஏப்ரல் மாதம் முதல் அரசை எதிர்த்து கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

கிளர்ச்சியை அடக்க அரசு கடும் நடவடிக்கை எடுத்துவருகிறது.

காபிலி பிரதேசத்தில் அனைத்து விதமான ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் ஆகியவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அந்தப் பகுதியில் இராணுவத்தினர் ஆர்ப்பாட்டங்களை அடக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் நடந்துவரும் கிளர்ச்சியில் இதுவரை சுமார் 87 பேர் உயிரிழந்துள்ளனர். (ஒ)

## த.மா.காவில் அதிரடி நடவடிக்கை

சென்னை,ஜூன்23

தமிழகத்தில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியில், அதன் தலைவர் ஜி.கே.மூப்பனாரைத் தவிர அனைத்து அமைப்புக்களின் நிர்வாகிகளும் நீக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் சென்னையில் கூடிய த.மா.காவின் செயற்குழு இந்த நடவடிக்கையை மேற்கொண்டதுடன், புதிய நிர்வாகிகளை நியமனம் செய்யும் பொறுப்பை மூப்பனாருக்கு வழங்கியது. (ஒ)

## வீரப்பனைப் பிடிக்கும் நடவடிக்கை ஆரம்பம்

ஈரோடு,ஜூன்23

சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனைப் பிடிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள சிறப்பு அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் காலை தேடுதல நடவடிக்கையை தொடங்கியுள்ளனர்.

சிறப்பு அதிரடிப்படையினர் 5 குழுக்களாகப் பிரிந்து சத்தியமங்கலம் காட்டுக்குள் நுழைந்துள்ளனர். (ஒ)

## சென்னை மேயர் பாதுகாப்பை மறுத்தார்

சென்னை,ஜூன்23

சென்னை நகர மேயர் மு.க.ஸ்டாலின், தனக்கு இனிமேலும் அரசுப் பாதுகாப்புத் தேவையில்லை என்று நேற்று அறிவித்ததுடன் தனது பாதுகாப்பு அதிகாரிகளையும் திருப்பி அனுப்பிவிட்டார்.

தனது பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட முடியாதவாறு பாதுகாப்பு அதிகாரிகளுக்கு மேலதிகாரிகள் உத்தரவிடுவதாக மேயர் ஸ்டாலின் தெரிவித்தார். (ஒ)

## இனவெறி ஒழிப்பு மாநாடு ஓகஸ்டில்

தென்னாபிரிக்காவின் ஏபன் நகரில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 7ஆம் திகதி வரை இனவெறி ஒழிப்பு மாநாட்டை ஐ.நா. நடத்தவுள்ளது.

# அதிர்வலைச் சத்திர சிகிச்சையில் ஆஸ்திரேலிய மருத்துவர் சாதனை!

மெல்போர்ன்,ஜூன்23

ஒன்பது வயதுச் சிறுவனின் மூளையில் வளர்ந்திருந்த சிறுகட்டியொன்றை நவீன சத்திர சிகிச்சை மூலம் அகற்றி ஆஸ்திரேலிய மருத்துவ நிபுணர்கள் சாதனை படைத்தனர்.



செபஸ்டியன் செலோ

பிரிட்டனைச் சேர்ந்த, செபஸ்டியன் செலோ என்ற சிறுவனுக்கு பிறக்கும் போதே மூளையில் ஒரு முந்திரிகைப்பழம் அளவிலான கட்டியொன்று இருநதது.

இதனால் சிறுவன் காக்கைவலிப்பு நோயால் பாதிக்கப்பட்டான். சிறுவனின் உணவு உட்கொள்ளும் திறனும் பேசும், நடக்கும் சக்திகளும் குன்றின.

இந்த நிலையில், மருத்துவப் பேராசிரியர் றொனீஸ்பெஸ்ட் தலைமையிலான ஆஸ்திரேலிய மருத்துவக்குழு அதிக அதிர்வெண் கொண்ட அதிர்வலைகளைப் பிறப்பிக்கும் "அல்ட்ரா சொனிக் அஸ் பிரேட்டர்" என்ற நவீன நுண் சத்திர சிகிச்சைக் கருவியைக் கொண்டு சிறுவனின் மூளைக்கட்டியை அகற்றும் சிகிச்சையை மேற்கொண்டது.

சிறுவனின் மண்டையோட்டில் துளையிட்டு, நுண்கருவியை உள்ளே செலுத்தி, உயர் அதிர்வுகளால் மூளைக்கட்டிளைச் சிதறடித்து, சிதைவுகளை, அதே கருவியினால் மீள உறிஞ்சி வெளியேற்றும் மிக அரிதான சத்திர சிகிச்சையை மருத்துவர் குழு வெற்றிகரமாக முடித்துள்ளது.

இந்தச் சத்திர சிகிச்சை முறை, ஏற்கனவே பல நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட போதும், அது வெற்றியடைந்திருப்பது இதுவே முதல் தடவையாகும். (ஒ)

# திருமாவளவன் கைது; தமிழகத்தில் வன்முறை!

தமிழகத்தில் 'விடுதலைச் சிறுத்தைகள்' அமைப்பின் தலைவர் திருமாவளவன் பொலீஸாரால் கைது செய்யப்பட்டதையடுத்து, மாநிலமெங்கும் பரவலாக வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த வாரம் மதுரையில் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொருளாளர் முரகொத்தான் பாண்டி படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக மத்திய புலனாய்வுத்துறை விசாரணை நடத்தக்கோரி போராட்டம் நடத்திய போதே திருமாவளவன் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து தலித்துகள் பெரும்பான்மையாக வாழும் மாவட்டங்களில், அரச பஸ்களுக்கு தீவைப்பு உட்பட பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

# மரணதண்டனை குறித்த மாநாடு

மரணதண்டனை தொடர்பான முதலாவது மாநாடு நேற்று முன்தினம் ஜெர்மனியில் ஸ்டாக்லோஸ் நகரில் ஆரம்பமானது.

மாநாட்டில் ஐரோப்பிய மன்றத்தின் செயலாளர் நாயகம் உரையாற்றிய போது, குற்றச் செயல்களுக்கு எதிரான போராட்டத்தில் மரணதண்டனை முக்கிய கருவியானால் அமெரிக்காவில் குற்றச் செயலகளே இருக்காது என்று குறிப்பிட்டார்.

அதே சமயம், ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கடந்த 10 நாள்களில் 2 மரணதண்டனைகளை நிறைவேற்றிய அமெரிக்காவை கடுமையாகக் கண்டித்தார்கள்.

இந்த வருடத்தில் மட்டும், சர்வதேச ரீதியில் 1300 பேரின் மரணதண்டனைகள் நிறைவேற்றப்பட்டதாகவும் -

72 நாடுகள் தற்போதும், மரணதண்டனைகளை விதிப்பதாகவும் -

77 நாடுகள் மரணதண்டனையை முற்றாக நீக்கி விட்டதாகவும் -

மாநாட்டில் சுட்டிக் காட்டப்பட்டன.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



2001.03.31ஆம் திகதி உதைபந்தாட்ட சம்மேளன விருதினைப் பெற்றுக்கொண்ட பருத்தித்துறை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் சிரேஷ்ட மத்தியஸ்தரும், பல மத்தியஸ்தர்களையும், பயிற்றுநர்களையும் தரமான வீரர்களையும் உருவாக்கியவருமான ஆசான

**திரு. தம்பிப்பிள்ளை இரட்னசிங்கம்**

அவர்களையும்

யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் செயலாளர், யாழ். உதைபந்தாட்ட லீக்கின் உபதலைவர்

**திரு. S. கிளிபேட் அன்ரனிப்பிள்ளை**

அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- பருத்தித்துறை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம்.

(89331)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 14 - 02 - 1947



உதிர்வு 24 - 05 - 2001

## அமரர் இளையதம்பி சண்முகநாதன்

(ஆனைக்குட்டி)

*(வலி.கிழக்கு வடபகுதி ப.நோ.கூ.சங்கப் பல்பொருள் கிளை முகாமையாளர் - அச்சுவேலி)*

**அன்பின் தனியூற்றாய் பண்பின் பரிவிடமாய்**
**கடமையின் கண்ணியனாய் வாழ்ந்த அப்பாவே!**
**நாம் தளிர்த்தோங்கும் பருவமதில் எமைக்**
**கதறவைத்துக் கடுகதியில் மறைந்ததேனோ?**
**உமை மறக்க முடியாமல் தவிக்கிறோமே!**

*உமது ஆத்மா இறைபாதக் கமலங்களில் சாந்தி அடையட்டும்.*

எமது அன்புத் தெய்வத்தின் மறைவின் போது எங்கள் ஆறாத் துயரில் பங்குபற்றிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் இரங்கலுரை ஆற்றியவர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவிப்பதோடு இன்று (23-06-2001) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருததிய நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.*

(89283)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# இதய அஞ்சலி



## P.R.தம்பிநாயகம்

எமது லீக்கில் பல வருட காலம் நிர்வாக உறுப்பினராக இருந்து பல வழிகளிலும் லீக்கின் அபிவிருத்திக்காகச் செயற்பட்டதுமல்லாமல் முக்கிய பதவிகளில் ஒன்றான பொருளாளர் பதவியிலும் சிலகாலம் இருந்து சிறப்பாகப் பணியாற்றியவருமான P.R.தம்பிநாயகம் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவர் மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்களோடு எமது கவலையைப் பகிர்ந்து கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்.

(89339)

*- யாழ். உதைபந்தாட்ட லீக் சமூகம்.*

# கண்ணீர் அஞ்சலி



## P.R.தம்பிநாயகம்

*(முன்னாள் பொருளாளர், யாழ்.உ.ம.சங்கம்)*

எமது சங்கத்தின் நீண்ட கால உறுப்பினரும், முன்னாள் பொருளாளருமாக இருந்து சங்கத்தின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்தவருமான P.R.**தம்பிநாயகத்தின்** மறைவினால் துயருறும் அவரது மனைவி, மக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோரது துன்பத்தை நாமும் பகிர்ந்து கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(89338)

*- யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம்.*

# நூல் வெளியீட்டு விழா

அரியாலை,ஜூன்23

நீர்வேலி செல்லக் கதிர்காம சுவாமி கோயிலின் "மஹோற்சவச் சிறப்பு" என்ற நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் தலைமையில் நடைபெறும்.

சிவஸ்ரீ கா.சாம்பசதாசிவக் குருக்களின் ஆசியுரையுடன் விழா ஆரம்பமாகும்.

வரவேற்புரையை சிவஸ்ரீ சா. சோமதேவக்குருக்களும் வெளியீட்டு உரையை பேராசிரியர் வி.சிவசாமியும் நுலாய்வுரையை விரிவுரையாளர் ப.கணேசலிங்கமும் நிகழ்த்துவார்கள். (க-117)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**

*உயர் பட்டப்படிப்புகள் பீடம்*

**தேர்வு - பட்டப்பின் கல்வித் தகைமை முழுநேரம் (மீள் தேர்வு), பகுதி நேரம் I (மீள் தேர்வு) மற்றும் பகுதி நேரம் II**

மேற்படி தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்களைப் பீடாதிபதி அலுவலகம், உயர்பட்டப் படிப்புகள் பீடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பதாரிகள் பாட அலகு ஒவ்வொன்றுக்கும் ரூபா 50/= வீதம் யாழ். பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளை அல்லது யாழ். பல்கலைக் கழக நிதிக்கிளையில் பணம் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டுடன் விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2001.07.10 அன்று அல்லது அதற்கு முன்பாகப் பீடாதிபதி அலுவலகம், உயர் பட்டப் படிப்புகள் பீடத்தில் சமர்ப்பிக்கப் படவேண்டும்.

பதிவாளர்
*யாழ்.பல்கலைக்கழகம்.*

(C/17178)


**ராஜா யாழ்ப்பாணம்**

9வேடங்களில் நடித்த அஜித், வசுந்துராதாஸ், நக்மா, மீனா மற்றும் பலர் நடிப்பில்

CITIZEN சிட்டிசன்

தினசரி 10.30, 2.00,5.00(புதிய நேரம்)

(C/17000)

**லஷ்சுமி இணுவில்.**

விஜயகாந்த்,லைலா, நாசர் நடிப்பில்

கள்ளழகர்

(ரீல்ஸ்)

S.T.R.பிலிம்ஸ் புதிய வெளியீடு.

தினசரி காட்சிகள : 10.30, 2.30 (ப.நே.)

சனி, ஞாயிறுகளில் :10.30, 2.30, 5.00

(89355)

**நாகம்ஸ் சுன்னாகம்**

விஜயகாந்த், மீனா நடித்த

சேதுபதி IPS

(ரீல்ஸ்)

தினசரி: 11.00, 2.30(புதிய நேரம்)

சனி, ஞாயிறு விசேட காட்சி 6.00 மணிக்கு

(89343)


# திருவாசக முற்றோதல்

தென்மராட்சி,ஜூன்23

நெல்லியடி அந்திராயன் முருகன் ஆலயத்தில் தென்மராட்சி திவ்யஜீவன சங்கமும் சாவகச்சேரி வித்தகம் அன்பர்களும் இணைந்து நடத்தும் திருவாசக முற்றோதல் இன்று சனிக்கிழமை காலை 6 மணி தொடக்கம் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (க-117)


**பலதரப்பட்ட தரமான கணனிகள் மலிவு விலையில்**



Intell Pentium iv, 1.4 GHz
Pentium III 733, 800MHz
CYREX 333 MHz

RS.55,000/= UP WARDS

**Offset Printing**
செய்வதற்குத் தேவையான
**Errasing Paper, Paper Plats**

மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு

மேலும் சகல உதிரிப்பாகங்களும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள

**SRIMURUGAN COMPUTER SYSTEMS**

303, K.K.S. Road, Jaffna.

T.P : 021 - 2670, 021 - 3588
Fax : 021 - 3214 email : del-smskr@eureka.lk

(C/17181)

**ஸ்ரீராம் ஓப்(f) செற் பிறின்ரேர்ஸ்**

கொழும்பு - ஜெயா ஓப்(f) செற் பிறின்ரேர்ஸ் - இனது யாழ். கிளையான

**SRIRAAM OFFSET PRINTERS இற்கு**

**Computer Type Setters தேவை**

ஆர்வமுடையோர் அலுவலகத்துக்கு நேரில்வரவும்.

காலம் :- 25-06-2001 (காலை 10.00மணி)

**விற்பனைக்குண்டு**

- ★ OFFSET PRINTING MACHINES
- ★ PRINTING MATERIALS
- ★ COMPUTERS
- ★ COMPUTER ACCESSORIES

**SRIRAAM OFFSET PRINTERS,**
*250, PALALY ROAD, KANTHARMADAM, JAFFNA.*

(89337)


# நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ் மன்றம் நடத்தும்

**திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல்**

(சிதம்பரபத்தினி)

**அவர்களின் கவிதை நூல்கள் வெளியீடு**

*இடம்* : கைலாசபதி கலையரங்கம், யாழ்.பல்கலைக்கழகம்.
*நாள்* : இன்று (23-06-2001) சனிக்கிழமை
*நேரம்* : காலை 9.30 மணி (புதியநேரம்)
*தலைமை* : தமிழ்மன்றத் தலைவர்.

**நிகழ்ச்சிகள்**

*தமிழ்வாழ்த்து* : லயனல் திலகநாயகம்போல்
*(உதவிக் கல்விப்பணிப்பாளர், யாழ். வலயம்)*
*தலைமையுரை* :
*அறிமுகவுரை* : கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா
*(தலைவர், தமிழ்த்துறை. யாழ். பல்கலைக்கழகம்)*
*வெளியீடு* :
மழலை அமுதம் - சிறுவர் கவிதைகள்
*முதற்பிரதி பெறுதல்* :
எஸ்.கிருஷ்ணசாமி *(உள்ளூராட்சி உதவி ஆணையாளர்)*
*வெளியீட்டுரை* : கலாநிதி நா.சண்முகலிங்கன்
*(தலைவர், சமூகவியல் - அரசறிவியற்றுறை)*
*ஆய்வுரை* : திருமதி கோகிலா மகேந்திரன்
*(உதவிக் கல்விப்பணிப்பாளர், வலிகாமம்)*
*வெளியீடு* : தேன்வதை - கவிதைத் தொகுதி
*முதற்பிரதி பெறுதல* : வே.சிவசிதம்பரம்
*(அதிபர், ஞானாசாரியார் கல்லூரி, கரவெட்டி)*
*வெளியீட்டுரை* : கவிஞர் சோ.பத்மநாதன்
*ஆய்வுரை* : சைவப்புலவர் சு.செல்லத்துரை
*பதிலுரை* : நூலாசிரியர்
*நன்றியுரை*:

அனைவரையும் தமிழ்மன்றம் அன்புடன் அழைக்கின்றது.

*மண்டபத்தில் விலை:*
*மழலை அமுதம் 200 ரூபா*
*தேன்வதை 250 ரூபா*

(89336)

தமிழ் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

# ஜனாதிபதியின் அழைப்பை நிராகரித்த முஸ்லிம் காங்கிரஸின் எம்.பிக்கள்!

ஜனாதிபதி தம்மைச் சந்திக்குமாறு விடுத்த அழைப்பை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்மட்ட உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நிராகரித்து விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

நேற்றுப் பிற்பகல் 2மணிக்குத் தம்மைச் சந்திக்கும்படி ஜனாதிபதி முஸ்லிம் காங்கிரஸ் உயர்மட்ட உறுப்பினர்களுக்கும் எதிர்க்கட்சி வரிசைக்குச் சென்றுள்ள கட்சியின் எம்.பிக்களுக்கும் அழைப்பு விடுத்திருந்தார் என்றும்-

தமது கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் மீது அபாண்டமான குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ள தங்களுடன் பேசுவதற்கு நாம் விரும்பவில்லை என அவர்கள் ஜனாதிபதிககு அனுப்பியுள்ள "பக்ஸ்" செய்தியில் குறிப்பிட்டுள்ளனர் என்றும் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் குறிப்பிட்டார். (க-3)

# எரிந்த நிலையில் இளைஞனின் சடலம் கைதடியில் அவரது வீட்டில் மீட்பு!

கைதடிப் பகுதியில் தனித்து வசித்து வந்ததாகக் கூறப்படும் இளைஞர் ஒருவரது சடலம் அவரது வீட்டில் இருந்து எரிந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் மீட்கப்பட்ட இவரது சடலம் உறவினர்களினால் யாழ். வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

கைதடி மேற்கைச் சேர்ந்த இராஜேந்திரன் இராஜகுலேந்திரன் (வயது 35) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

அவர் சம்பவதினம் இரவு தனக்குத் தானே மண்எண்ணெய் ஊற்றி தீமூட்டித் தற்கொலை செய்து கொண்டதாக இவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

இவரது சடலத்தை பார்வையிட்ட யாழ்.பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு பிரேத பரிசோதனையை மேற்கொள்ளுமாறு சட்ட வைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்டார்.(ம-5-10-86)

# யாழ். மாவட்ட கிரிக்கெட் அணி நேற்றைய போட்டியிலும் வெற்றி

கொழும்பு,ஜூன்23

கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஏற்பாட்டில் 19 வயதுப் பிரிவுக்கான மாகாண அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்டு வரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மாத்தளை அலுவிகாரை சர்வதேச விளையாட்டு மைதானத்தில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.மாவட்ட அணி 50 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 281ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சிற்சபேசன் ஆட்டம் இழக்காமல் 77ஓட்டங்களையும் லவேந்திரா 62ஓட்டங்களையும் பிருந்தாபன் 59 ஓட்டங்களையும் சிவசங்கர் 17ஓட்டங்களையும் பிரகாஷ் 12ஓட்டங்களையும் பெற்றனர்.

வவுனியா அணி வீரர்களான வினோத்குமார் 54ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களையும் கௌசிகன் 34ஓட்டங்களுக்கு இரண்டு விககெட்டுக்களையும் ரமணன் 41ஓட்டங்களுக்கு இரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

அதைத் தொடர்ந்து ஆடிய வவுனியா அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 231ஓட்டங்களைப் பெற்றது.

அதில் கவாஸ் 54ஓட்டங்களையும் விதுகன் 46ஓட்டங்களையும் மயூரன் 39ஓட்டங்களையும் பெற்றனர்.

யாழ்.அணி வீரர்களான லவேந்திரா 25 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களையும் பிரகாஷ் 34ஓட்டங்களுக்கு இரு விக்கெட்டுக்களையும் சங்கர் 17 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் ரஜீவ்குமார் 34 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இந்தச் சுற்றுப் போட்டியில் இடம்பெற்ற ஆட்டங்களில் வவுனியா அணி மட்டக்களப்பு, திருகோணமலை அணிகளைத் தோற்கடித்திருந்தது.

மட்டக்களப்பு அணி யாழ்ப்பாணம், வவுனியா அணிகளிடம் தோல்வி கண்டது.

யாழ்ப்பாணம் அணி மட்டக்களப்பு, வவுனியா அணிகளை இது வரை வென்றுள்ளது.

யாழ்.அணி திருகோணமலை அணியை இன்று சந்திக்கின்றது.

சுற்றுப் போட்டியின் இறுதியாக மட்டக்களப்பு அணியும் திருகோணமலை அணியும் மோதும். (க-3)


தரமான கணனிகள் மலிவான விலையில்

Intel நிறுவனத்தின் Latest வெளியீடான அதிநவீன கணனிகள்

பாடசாலைகளில் கணனியா?

அலுவலகங்களில் கணனியா?

கவலையை விடுங்கள்! உங்கள் வீட்டிலும் கணனி.

Intel நிறுவனத்தின் Latest வெளியீடான அதிநவீன கணனிகள்

1000 MHz (1 Ghz) Processor.
40 GB Harddisk
SD Ram 128MB
VGA Card 8MB
SamSung 14" Color Monitor
Floppy drive 3.5/1.44 MB
Keyboard -108-win98
Mouse (Genius)
ATX Casing
Mouse pad
CD Rom 52x Acer
Sound card 32/64Bit
3D Multi Media Box

Free

Filter glass
Dust cover
Copy Holder
10 Floppy Disks
Any Soft Ware Installation
இன்னும் பல



மற்றும் ஏனைய உபகரணங்கள்

UPS , Epson LQ-300 Printer, Scanner [Genius], Mother Board, Ram, Ribbon, Cartridge, Ink Jet Refill, Hard Disk, SubWoofer, Floppy Disk இன்னும் பல

தொடர்புகளுக்கு IBMS IT MARKET NO:701,K.K.S.Road, Jaffna.

T.P:3165


## அரசை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளையும் எடுக்கும்.

இன்றைய அரசியலில் பல்வேறு கருத்துக்கள் பலவாறு தெரிவிக்கப்பட்டாலும் ஈ.பி.டி.பியைப் பொறுத்தவரை அரசாங்கத்துடனான அதன் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஜனாதிபதியுடனோ, அரசாங்கத்துடனோ எமக்கு எவ்வித கருத்து வேறுபாடும் இல்லை. மாறாக ஜனாதிபதி மீதும் அரசாங்கத்தின் மீதும் முழு நம்பிக்கையுடன் செயற்பட்டு வருகின்றோம் என்று அந்தக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளனர்.

இனி வருங்காலங்களில் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் உறுதியளித்திருக்கிறார்.

அரசாங்கம் நாடாளுமன்றப் பெரும்பான்மையை இழந்து ஆட்டங்காணும் நிலையிலும் அதன் மீது எதிர்க்கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்துள்ள நிலையிலும் உருவாகியுள்ள அரசியல் நெருக்கடியின் மத்தியில் தேசிய அரசு நிறுவுவது குறித்து இரு தலைவர்களும் நிச்சயம் பேசியிருப்பர்.

எனினும் அந்த விவரங்கள் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளன என்று உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்தி ஊடகங்கள் பலவும் தெரிவித்துள்ளன.

சமாதானப் பேச்சுக்குக் குந்தகம் விளைவிக்காமல், தாம் ஏற்கனவே வகுத்த அரசியல் நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தலாம் என்று எதிர்க்கட்சித் தலைவரிடம் சந்திரிகா கூறியிருப்பதாகக் கூறியிருப்பது மறைபொருள் நிறைந்தது என அரசியல் அவதானிகள் தெரிவித்தனர். (அ-3-4)

## நம்பிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைச்சாத்திட்டுக் கையளித்துள்ள இந்தப் பிரேரணையில் -

நாட்டினதும் மக்களினதும் கொளுந்து விட்டெரியும் பிரச்சினைகளைத் தீர்க்க அரசு தவறியுள்ளமை நிரூபணமாகியுள்ளதால், அதன் மீதான நம்பிக்கை இழக்கப்பட்டுள்ளதென இந்த நாடாளுமன்றம் கருதுகிறது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரேரணையில் ஐ.தே. கட்சியின் 88 உறுப்பினர்களும் -

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களான வீ.ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராசா, ஜோசப் பரராஜசிங்கம், எஸ்.சிவமகாராசா, எஸ்.செல்வராசா ஆகியோரும் -

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் அ.விநாயகமூர்த்தியும்-

ரெலோ அமைப்பின் தலைவரான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் விநோதரலிங்கம், ராஜபுவனேஸ்வரன் ஆகிய மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் - கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்தப் பிரேரணையில் ஏனைய எதிர்க்கட்சிகளான ஜே.வி.பி., சிஹல உறுமய, முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் உறுப்பினர்கள் எவரும் கைச்சாத்திடவில்லை. (க-3-4)


ஆங்கிலத் திரைப்பட CDக்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம். கட்டணம் 30/- இச்சலுகை எதிர்வரும் 15ஆம் திகதி மட்டுமே.

மூர்த்தி வீடியோ

மானிப்பாய் (C/17186)

ஈசன் கல்வி நிலையம்

கணக்கீடு

A/L 2002

பங்குடமை

திரு. பாலவாசன்
B.B.A.(F.M.Spl)

ஆரம்பம்:24.06.01(SUN) 3.00p.m.

(89260)

கலைச்சுடர் சிறப்பம்சம் திங்களன்று வெளிவரும்


## நவாலியில் நேற்றிரவு தேடுதல்

வலி.தென்மேற்கு,ஜூன்23

நவாலிப் பகுதி நேற்றிரவு 10.30 மணி முதல் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது.

வீடு வீடாகச் சென்ற படையினர் குடும்பப் பதிவு அட்டைகளைச் சோதனை செய்தனர். (க-3-185)

## சிஹல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பிரேரணையில் கையொப்பம் இடாத போதும் தமது கட்சி உறுப்பினர் நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்பில் அரசுக்கு ஆதரவாக வாக்களிக்கமாட்டார் என்றும் அவர் சொன்னார். (க-3-4)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய அரசாங்கம் ஒன்றை அழைக்க எமக்கு உடன்பாடு இல்லை. இதனை நாம் ஏற்கனவே தெளிவாகக் கூறியிருந்த போதிலும் ஆட்சியில் ஆட்டம் காணும் நிலை ஏற்பட்ட பின்பும் தேசிய அரசாங்கம் பற்றி அரசு பேசுகிறது.

பிரேரணை மீதான விவாதம் அடுத்த மாதம் முதல் வாரத்தில் அல்லது மூன்றாவது வாரத்தில் இடம் பெறும் என எதிர்பார்க்கிறோம்.

- இப்படி அவர் கூறினார்.

### கூட்டரசாங்கம்

நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் அரசு கவிழுமாயின் ஆதரவு தந்த கட்சிகளைச் சேர்த்து கூட்டரசாங்கம் ஒன்றை அமைக்க இருப்பதாக ஐ.தே.கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஜனநாயகத்தைப் பேணுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் வரை இது ஒரு தற்காலிக அரசாக இருக்கும் என்றும் அவர் மேலும் சொன்னார். (க-3-4)

## நாடு திரும்புமாறு அவசர உத்தரவு

கொழும்பு,ஜூன்23

வெளிநாடு சென்றிருக்கும் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உடனடியாக நாடு திரும்ப வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா உத்தரவிட்டுள்ளார் என்று வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது. (க-4)

## இரு இளைஞர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் நிற்காமல் ஓடவே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் - படைத்தரப்பு தெரிவித்தது.

இரு சடலங்களும் அடையாளம் காண்பதற்காகவும் மரணவிசாரணைக்காகவும் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. (க-3-5-10-86)

## நயினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்கள் அங்கும் கடற்படையினரால் சோதனையிடப்படுகின்றன.

"நாகபூஷணியைத் தரிசிப்பதற்கும் சோதனைகள், கெடுபிடிகளா?" என்று அங்கு பக்தர்கள் வாய்விட்டுக் கூறுவதை நேற்றுக் கேட்க முடிந்தது.

இதேவேளை -

உற்சவத்தில் கலந்துகொண்ட பின்னர் வீடு திரும்பும் பக்தர்களும் வேலணைத்துறை, அல்லைப்பிட்டி, பண்ணைப்பாலம் ஆகிய இடங்களில் உள்ள கடற்படையினரின் சோதனைச் சாவடிகளில் இறக்கப்பட்டு நீண்ட வரிசையில் நிறுத்தப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

கடந்த மாதம் 28ஆம் திகதி யாழ். செயலகத்தில் நடைபெற்ற நயினை நாகபூஷணி அம்மன் ஆலய உற்சவம் தொடர்பான கலந்துரையாடலில் யாழ். துரையப்பா ஸ்ரேடியத்தில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் பஸ்களில் ஏற்றப்படும் பக்தர்களுக்கு குறிகாட்டுவான் வரை படையினரே வழித்துணை வழங்குவர் எனத் தீர்மானிக்கப்பட்டதும் -

அரச உயர் அதிகாரிகள், படை அதிகாரிகள் மற்றும் ஆலய அறங்காவலர் சபையினர் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டதும் தெரிந்ததே. (க-7-10)

## இனப்பிரச்சினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருக்கிறது.

இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக நாம் கையெழுத்து இட்டதன் மூலம் நாம் புதிதாக எதனையும் செய்து விட்டதாகக் கூற முடியாது. பல விடயங்களில் ஏற்கனவே நாங்கள் அரசாங்கத்துக்கு எதிராக வாக்களித்து இருக்கிறோம்.

எனினும் சமாதான முயற்சிகளைக் குழப்பக்கூடாது என்ற நிலைபாட்டில் நாம் இருந்தபோதும் அரசாங்கம் அதில் தெளிவான நடைமுறைகளையும் விருப்பத்தையும் கொண்டிருக்கவில்லை. இந்த அரசாங்கத்தில்தான் தமிழர்களின் இருண்டயுகம் ஏற்பட்டிருக்கின்றது.

இந்த நிலையில்தான் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாகச் செயற்படத் தீர்மானித்தோம்.

இதற்காக ஐ.தே.கவிடம் இருந்து வாக்குறுதி எதனையும் நாம் பெறவில்லை. மாறாக ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற வாய் மூலமான வாக்குறுதியைப் பெற்றிருக்கிறோம்.

இதன் அடிப்படையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஏற்கனவே முடிந்த இடத்தில் இருந்து மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும். தேர்தல் காலத்தில் மோசடிகளும், விசேடமாகக் கள்ளவாக்குகள் இடப்படுவதற்கு எதிரான நடவடிக்கைகள் எடுககப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம் - இப்படி அவர் தெரிவித்தார். (க-7-4)

## மரண அறிவித்தல்

### பொன். சபாபதி

(முன்னாள் கிளிநொச்சி மாவட்டக் கல்விப் பணிப்பாளரும் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் வன்னி இணைப்பாளரும்)

நுணாவில் - மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்.சபாபதி அவர்கள் 19-06-2001 அன்று கிளிநொச்சியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னர் - தெய்வானை ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, ஜெயலட்சுமி ஆகியோரின் அன்பு மருமகனும் லீலாவதியின் அன்புக் கணவரும் நாவேந்தன் (இந்தியா), வேல்மாறன் (களஞ்சியப் பொறுப்பாளர், உணவுக் கட்டுப்பாட்டுக் கிளை, மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி நாவேந்தன் றேணுகா (கனடா) அவர்களின் மாமனாரும் தம்பு, காலஞ்சென்ற சின்னம்மா மற்றும் சிவக்கொழுந்து, பொன்னம்மா ஆகியோரின் சகோதரனும் யசோதை (சுவிஸ்), கோசலை (ஆசிரியை, இராமநாதன் கல்லூரி - மருதனார்மடம்), காலஞ்சென்ற கிரிதரன் மற்றும் கெங்காதரன் (ஜேர்மனி), துவாரகை, சகுந்தலை (ஜேர்மனி), கிருபாகரன் ஆகியோரின் மாமனாரும் பிரபாகரன் (பிரான்ஸ்), கிருஷ்ணவேணி (நோர்வே), ரகுநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-06-2001) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது ஏழாலை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*"துளசி",*
*ஏழாலை மேற்கு,*
*ஏழாலை.*

தகவல்:
**ச.வேல்மாறன்**
(களஞ்சியப் பொறுப்பாளர், காங்கேசன்துறை)

(89318)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.06.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.